★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 புரட்டாதி 27 ஜுல்கஜ் 25 இதழ் 242
யாழ்ப்பாணம் புதன்கிழமை 13—10—82

# மட்டக்களப்புப் பொலிஸில் தமிழ்மொழி புறக்கணிப்பு

## அபி. சபையில் அமைச்சர் 'இராசு' கண்டனம்

[மட்டக்களப்பு]

அரசின் கொள்கைக்குவிரோதமாக மட்டக்களப்பு பொலிசார் நடந்து கொள்வதாக தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு செ. இராசதுரை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபைக்கூட்டத்தில் பலத்தகண்டனம் தெரிவித்தார்.

அபிவிருத்தி சபைக் கூட்டம் சபைத்தலைவர் திரு. எஸ். சம்பந்தமூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் பொதுமக்களால் கொடுக்கப்படும் சகல முறைப்பாடுகளும் சிங்களத்திலேயே பதியப்படுவதாக அமைச்சர் குற்றம் சாட்டினர்.

வடக்கு, கிழக்கில் தமிழில் கருமமாற்றுமாறு சட்டம் கூறுகின்றபோதிலும் மட்டக்களப்புப்பொலிசார் தான் தோன்றித்தனமாக சகல முறைப்பாடுகளையும் சிங்களத்திலேயே பதிவதாக அமைச்சர் 'இராசா' கண்டனம் தெரிவித்தார்' [அ]

★ டேவிட்சன் ஆட்கொணர்வு மனு:

# தடுப்புக்காவல் காரணங்கள்: 15வரை அவகாசம்

## 18-ல் விசாரணை ஆரம்பம்

# குண்டுவெடிப்புச் சம்பவம்:

## தொடர்பிருக்கலாம் என்று வாதம்

(கொழும்பு)

**ஈழமாணவர் பொதுமன்றச் செயலாளர் எம். டேவிட்சன் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதற்கான காரணங்களை இம் மாதம் பதினைந்தாம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்று, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் அரசதரப்பினருக்கு நேற்று உத்தரவிட்டனர்.**

ஜனாதிபதியின் யாழ் விஜயத்தை பகிஷ்கரிக்குமாறு கோரி துண்டுப் பிரசுரம் வெளியிட்டதை அடுத்து, பொலிஸில் சட்டத்தரணி மூலம் டேவிற்சன் சரணடைந்ததும், பின்னர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் டேவிற்சன் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து டேவிற்சனின் சகோதரர் ஜோன்ஸன் ஆட்கொணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்ததும் தெரிந்ததே.

இம் மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான திரு. ஆனந்த ஜி. டி சில்வா, திரு. ஜே. எஸ்.அபேவர்த்தன ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கெடுக்கப்பட்டபோது அரச தரப்பில் இரண்டு வார கால அவகாசம் கோரப்பட்டது.

இதனை மனுதார் தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி வி எஸ். புள்ளநாயகம் ஆட்சேபித்திருந்தார். இந்த ஆட்சேபனையைத்தொடர்ந்து, டேவிற்சன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டது தொடர்பாக தெளிவான காரணம் நாளை (நேற்று) தெரிவிக்கப்பட வேண்டும் என்று நீதியரசர்கள் பணிப்பு வழங்கினர்கள். இதனைத் தொடர்ந்து விசாரணை நேற்று மீண்டும் ஆரம்பமானது.

### குண்டு வெடிப்பு சம்பவங்கள்

அரச தரப்பில் ஆஜரான சட்டத்தரணி குமாரசிறி; ''ஹர்த்தால் பகிஷ்கரிப்புக் கோரி டேவிற்சன் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு ளார். ஹர் தால் அமை யாகநடக்கவில்லை. காரைநகரிலும்,யாழ். நகரிலும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. குண்டுவெடிப்பு சம்பவங்கள் குறித்து விசாரணைநடத்தி வரும் சி ஐ டி. பொலிஸார், இச்சம்பவங்களுக்கும் டேவிற்சனுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று கருதுகின்றனர். இரகசியப் பொலிசாரின் விசாரணைகள் முடிவடைந்து அறிக்கை கிடைக்க வேண்டும்'' என்று வாதிட்டார்.

மனுதார்தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி திரு

[8-ம் பக்கம் பார்க்க]

# ஜப்பான் பிரதமர் திடீர் ராஜினமா

டோக்கியோ, அக். 12 ஜப்பானியப் பிரதமர் திரு. சென்கோ சுசுக்கி பிரதமர் பதவியிலிருந்து ராஜினமா செய்துள்ளார்.

புதிய பிரதமர் எதிர்வரும் சனிக்கிழமை தெரிவு செய்யப்படுவார் எனறு அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சென்கோ சுசுக்கி ஜப்பானின் ஆளும் கட்சியான லிபரல் கட்சியின் 4 முக்கிய தலைவர்களின் கூட்டத்தில் தலைவர் பதவியை ராஜினமாச் செய்யும் கடிதத்தைச் சமர்ப்பித்தார்.

ஆளும் கட்சித் தலைவரே ஜப்பானின் பிரதமராவது அரசியலமைப்பின் ஒரு விதியா

[8ம் பக்கம் பார்க்க]

# மட்டக்களப்பிலும் தொழில் நீதிமன்றம் நவம்பர் 2-ல் இயங்கும்

(மட்டக்களப்பு)

தொழில் நீதிமன்றம்மட்டக்களப்பிலும் ஆமைக்கப்படருக்கிறது.

ஜனாதிபதியினல் அங்கீகரிக்கப்பட்டதிட்டத்துச்கு அமைய இத் தொழில்நீதிமன்றம் மட்டக்சளப்பில் அமைக்கப்படுகிறது.

அடுத்தமாதம் இரண்டாம் திகதி முதல் இயங்கவிருக்கும் இத்தொழில் நீதிமன்றம் ''கிழக்குப்பிராந்திய இலக்கம் 22-வது தொழில் நீதிமன்றம்'' என்ற பெயர்கொண்டிருக்கும். இது சம்பந்தமான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு தொழில் நீதிமன்றங்களின்செயலாளர் திரு. என். சுப்பிரமணியம், நீதி அமைச்சினல் பணிக்கப்பட்டுள்ளார்.

குருநாகலையிலும் விரைவில் தொழில்நீதிமனறம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

# யாழ். வாக்காளர்களுக்கு ஜே. ஆர். கடிதம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக வாக்காளர்களுக்கு திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன எழுதிய கடிதம், யாழ். நகரவாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுவருகிறது.

''சுதந்தி மான தார்மீக சமுதாய இலக்கைநோக்கிநாம் அனைவரும்ஒன்றிணைந்துசெல்ல என்னுடன் வாருங்கள் என் நண்பர்களே'' எனும் தலைப்பில் மூன்றுமொழிகளிலும்இக் கடிதம் அச்சடிக்கப்பட்டு மும்மொழிகளிலும் திரு. ஜே. ஆர்.ஜெயவர்த்தனைகையெழுத்திட்டுளளார். இப் பிரசுரக்கடிதம் யாழ். வாக்காளர்களுச்கு வீட்டுக்கு வீடாக விநியோகிக்கப்பட்டுவருகிறது.

## லொறிகள் தேவை

பாலக்குளத்தில் இருந்து காங்கேசன்துறை
சிமெந்துத் தொழிற்சாலைக்கு
கல் ஏற்றி வருவதற்கு லொறிகள் தேவை.
கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்:-

**V.M.சண்முகம் & பிறதர்**
**இல. 85, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

4821

# "தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும்"

## யாழ். நகரில் 'வாசு'

[ஏ. வி. மாணிக்கம்]

''தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாகக் கணிக்கப்பட்டு,சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என நவசமசமாஜக் கட்சி வலியுறுத்துகிறது.''

மேற்கண்டவாறு யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நவசமசமாஜக்கட்சி சார்பில்போட்டியிடும் அதன் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார பேசுகையில் கூறுனர்.

நவசமசமாஜக் கட்சியின் யாழ். மாவட்டத் தலைவர் திரு. ஆ. க. அண்ணாமலை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திறந்தவெளியரங்கு சிவப்பு நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஏராள மாணவர் உள்ளும் புறமும் சூழுமியிருந்தனர்.

திரு வாசுதேவநாணயக்கார தமது உரையை தமிழில் சிறிது நேரம் நிகழ்த்திவிட்டுப் பின்னர் ஆங்கிலத்தில் பேசினர். அவர் உரை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது

தமிழ்மக்கள் ஒரு தேசிய இனமாகக் கணிக்கப்பட்டு, பிரிந்து போகும் நிலையை அதாவது சுயநிர்ணய உரிமைவழங்கப்படவேண்டுமென நவலங்கா சமசமாஜக்கட்சி வலியுறுத்துவதுடன் மட்டுமல்லாது கடந்த காலங்களில் தமிழரின் போராட்டங்களில் தமிழருக்குத்தமது ஆதரவைக் கொடுத்து வந்திருக்கிறது என்று குறிப்பிட்ட திரு, வாசுதேவா தமிழருக்கு எதிரான அடக்குமுறைகளை நாங்கள் கண்டித்திருக்கிறோம்'' என்றார்.

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணம் ரேயல் டிஸ்பென்சறிக்கு திடகாத்திரமும், நல்லொழுக்கமுமுள்ள இரவுக் காவலாளி உடன் தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வரவும். 4801

வர்த்தக, வருமானக் கணக்குகள் எழுதுவதில் திறமையும் அனுபவமும் உள்ள கணக்குப்பதிவாளர் தேவை. சகல தஸ்தாவேஜுகளுடனும் உடன் நேரில் வரவும் ரேயல்டிஸ்பென்சறி, யாழ்ப்பாணம். 4802

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆசிரியர்களான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முழு விபரத்துடன் உடனடியாக விண்ணப்பிக்கவும் நிர்வாகி, நாவலர் கல்வி நிலையம், சித்தன் கேணி. (4809)

தினசரி பாவனையிலுள்ள பொருட்கள் விற்பனை செய்ய அனுபவம் வாய்ந்த விற்பனையாளர் தேவை. (Sales Repre--sentative) மாதம் ரூபா 1000/க்குமேல் வருமானம் பெற வாய்ப்பு உண்டு. இரு நற்சாட்சிப்பத்திரங்களுடனும் இரு பொறுப்புவாய்ந்த நடுவர்களின் பெயர்களுடனும் 19–10–82க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:4819 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 4819

## விற்பனைக்கு

உரும்பிராய் Q. C. தியாகலிங்கம் வீட்டிற்கு அருகாமையில்9 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும். 37, பிரப்பங்குளம்ரோட், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். செ. நடராசா உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். 4812


## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

[இல84 அ– பிரிவுகள் 524, 532]

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற துணுக்காய், கொக்காவில் வீதி, செல்லையா மகள் செல்லம்மா என்பவரின் மரணசாதனத்தின் / மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்
— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம்; இல; 16

(1 சின்னையா செல்லப்பா
(2) பெண் சிவக்கொழுந்து 6/7, கொக்காவில் வீதி துணுக்காய்.
— மனுதார்

எதிர்

அருணாசலம் அமிர்தலிங்கம் கச்சாய் வீதி, கொடிகாமம்.
— பிரதிவாதி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை / எண்பிப்பதற்காக மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982–ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 26–ஆந் நாளன்று முற்பகல் 9–00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
சி. கமலேஸ்வரன்
பதிவாளர்

1982–ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 7–ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

வரைவு:

க. வ. சுப்பிரமணியம்,
சட்டத்தரணி. 4816


# வெளிநாட்டில் வேலை வாய்ப்பு

பின்வரும் 100 பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
(உடனடியாகத் தேவை)

(1) லிபியாவில் உள்ள ஜேர்மன் நிறுவனம்:

- ✶ எஞ்ஜினியர்ஸ்
- ✶ வெல்டேர்ஸ்
- ✶ பிளம்பர்ஸ்
- ✶ மேசன்
- ✶ தச்சுத் தொழிலாளர்
- ✶ இயந்திரவியலாளர்
- ✶ அளவையாளர்கள் (Quantity Surveyors)
- ✶ படவரைஞர்கள் (Draftsmen)
- ✶ சாரதிகள் (Heavy Vehicles)
- ✶ மெக்கானிக்ஸ் (Mechanics–Heavy)
- ✶ வேலையாட்கள்

(2) மத்திய கிழக்கு :

- ✶ வேலையாட்கள்
- ✶ பணிப் பெண்கள் / ஆண்கள்
- ✶ ஹோட்டல் கீப்பர்ஸ், உதவியாளர்கள்

பாஸ்போட் போட்டோஸ்ரட் பிரதி, போட்டோ, அனுபவ சான்றிதழ், நற்சான்றிதழ் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் இரு பிரதிகளுடனும் 150/– ரூபாவுடனும் நேரில் வரவும்

**என். பாஸ்கரன் J. P.,**
(பிரதேசசபைத் தலைவர் கரவெட்டி)

**INDRANEE AGENCY**
நெல்லியடி, கரவெட்டி.

Labour Licence No. 276. போன்: 898–கரவெட்டி
(1813)


# ஐ. தே. க. தொடர்ந்து பதவியிலிருக்கும் வகையிலேயே அரசியல் அமைப்பு!

## கொல்வின் கூறுகிறார்

(மாத்தறை)

''இந்த நாட்டு மக்கள் ஒவ்வொரு தேர்தலின்போதும் அரசாங்கங்களை மாற்றியமைத்தே வருகின்றார்கள். இவ்வாறு ஐ தே கவும் மக்களால் மீண்டுமொருமுறை தெரிவு செய்யப்படாமற் போய்விடலாமென்ற பயத்தினலேயே தமது கட்சிக்கு சாதகமான அரசியல் அமைப்பை ஜே ஆர். உருவாக்கியுள்ளார்''

இவ்வாறு ல. ச. ச. கட்சியின் ஜனதிபதித் தேர்தல் வேட்பாளரான கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா பெலியத்த என்ற இடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''பொதுத் தேர்தலின்போது இந்த நாட்டின் சகல பாகங்களிலும் ஐ. தே. க. தோற்கடிக்கப்பட்டாலும் ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவரிடமே முழு நிறைவேற்றதிகாரமும் இருக்கும். இதுவே தற்போதைய அரசியல் அமைப்பின் முக்கிய அம்சமாகும். எனவே இந்த ஜனதிபதித் தேர்தலில் நேர்மை, திறமை ஆகியவற்றினையுடைய வேட்பாளர் ஒருவரையே பொதுமக்கள் ஜனதிபதியாகத் தெரிவுசெய்ய வேண்டும். இப் பதவிக்கு போட்டியிடும் அபேட்சகர்களில் நானே இதனை வகிக்கப் பொருத்தமானவன்'' என்றார்.

# ''கூட்டணியினரே குமாருக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினர்''

## சாவகச்சேரியில் கோவை மகேசன்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது லட்சியப்பாதை தவறித் திசை திரும்பியதால் அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி குமார் பொன்னம்பலம் வாக்குக் கேட்க ஒரு சந்தர்ப்பத்தை கூட்டணித் தலைவர்கள் ஏற்படுத்திவிட்டார்கள்.

சாவகச்சேரி சந்தை மைதானத்தில் நடந்த தமிழ்ஈழவிடுதலை அணிக்கூட்டத்தில் உரையாற்றிய கோவை மகேசன் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. எஸ். அருளம்பலம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு கோவை மகேசன் மேலும் கூறியதாவது;–

ஸ்ரீ லங்காவின் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன பலத்த பந்தோபஸ்தின் மத்தில் வாக்குக் கேட்டுச் செல்கிறார். யாழ்ப்பாணப் பகுதியில் நடந்த கலவரங்களின்போது விலைமதிப்பற்ற பொக்கிசமான நூல்நிலையம், ஈழநாடு காரியாலயம், தமிழர் கூட்டணிக்காரியாலாம் என்பன எரிக்கப்பட்டபோது வந்து வடபகுதியைப்பாராத இவர் இன்று வாக்குப் பிச்சைகேட்கப் படைபட்டாளத்தோடு மிகுந்தபாதுகாப்போடு வந்து செல்கிறார்.

பிரசுரச் சுதந்திரமிருப்பதாக அவரது விஞ்ஞாபனம் கூறுகிறதே. ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டதாக ''டேவிசன்'' என்ற இளைஞரைக் கைது செய்தார்களே அவர் இன்று எங்கே? கைது செய்யப்பட்டு 24 மணி நேரத்துக்குள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவேண்டும். அதற்குப்பதிலாகக் கிழமையொன்று முடிந்துவிட்டது பனகொடை சிறையில் சித்திரவதை செய்யப்படுகின்றார் இதுதான தார்மீகம்?

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டமொன்றில் நூலகம் எரிக்கப்பட்டால் அதைக் கட்டலாம் பொலிசாரைச் சுட்டுக்குவித்தால் அவர்களது உயிரை மீண்டும் பெறலாமா என்றார். நான் அவரைக் கேட்கிறேன் – நூலகம் கட்டலாம், விலைமதிக்கமுடியாத பொக்கிசமாகிய நூல்களைப் பெறலாமா? அல்லது பலியான இன்பம், செல்வம், சிவகுமார், பாலசோதி போன்ற இளைஞர்களின் உயிர்களைப் பெறலறமா? பொலிசாரின் உயிருக்கு இவர்களது உயிர் ஈடிணையற்றதா?

தமிழர் விடுதலையணித்தலைவர் டாக்டர் எஸ் தர்மலிங்கம் உரையாற்றுகையில்; அடிக்கடி எமது இளைஞர்கள் கைதுசெய்யப்படுகிறார்கள். அண்மையில் பல்கலைக்கழக மாணவன் இராசநாயகம் என்பவர் கைது செய்யப்பட்டான் அவன் எங்கே என்பது எவருக்கும் தெரியாது.

சர்வாதிகாரி ஹிட்லர் அறுபது லட்சம் யூதர்களைக் கொன்று குவித்தார். அதனுல் பலஸ்தீனம் உருவானது அதே போல எமது இளைஞர்களை மாத்திரமல்ல எம்மையும் கொன்றுகுவித்தாலும் எமது இலட்சியப்பாதையைக் கைவிடப்போவதில்லை. என்னைத் தீர்த்துக்கட்டச் சில தினங்கட்கு முன் எமது வீட்டுக்குக் குறிவைத்தனர். நான் இறந்தாலும் இளைஞர்கள் தொடர்ந்து போராடுவார்கள்.

நெருக்கடியான இந்த நேரத்தில் தமிழ்த் தலைவர்கள் குடும்ப சமேதராக உலகம் சுற்றுகின்றார்கள். அரசாங்கம் கூட்டணியினரை ஏமாற்றினலும் இந்த விடுதலையணியினரை ஏமாற்றமுடியாது.

[ஈ]

# 'தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்'

## – குமாரசூரியர்

(கிளிநொச்சி)

''பொது உடன்படிக்கை அடிப்படையில் கொப்பேகடுவாவை ஆதரிக்கின்றோம். அவர் ஜனதிபதி ஆனதும் சகல மக்களிற்கும் சுபீட்ச வாழ்வை ஏற்படுத்துவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.''

இவ்வாறு முன்னுள் அமைச்சர் திரு. எஸ். குமாரசூரியர் கிளிநொச்சி றெட்றிக்கோ அரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

திரு. என். சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. குமாரசூரியர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''எமது தமிழ் மக்கள் தமிழ் மண்ணில் பாதுகாப்பின்றி வாழ்கின்றனர். அதற்கு ஒரு தீர்வு காணவேண்டும். சகல இடதுசாரிகளும் ஒன்றுபட்டு கொப்பேகடுவையை ஆதரிக்க வேண்டிய இவ்வேளை கலாநிதி கொல்வின் போட்டியிட்டு குழப்பத்தை ஏற்படுத்துகிறார். 77 தேர்தலில் வெற்றிபெற்றதும் வட்டமேசை மகாநாடு கூட்டி தமிழ் மக்களின் பிரச்னையைத் தீர்க்கப்போவதாக கூறிய ஜே. ஆர். பின்னர் கொடுத்த வாக்கை மறந்தார் என்றார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகரும் நடிகருமான விஜய குமாரணதுங்க பேசுகையில் கூறியதாவது:

ஜே ஆர், ஜெயவர்த்தன தமிழ்மக்கள் மத்தியில் சென்று தமது கொள்கைகளை விளக்க எத்தனையோ பாதுகாப்புக்களுடன் பெருந்தொகைப் பணத்தை செலவு செய்துவந்தார். அவர் தமிழ்மக்களிற்கு உருப்படியாக ஒன்றையும் செய்யாததே இதற்குக் காரணம். எமது கட்சியினரோ எந்தப் பாதுகாப்பும் இன்றி சாதாரண நிலையில் மக்களோடு மக்களாகவே சென்றுபிரசாரம் செய்கின்றனர். எமக்கு தமிழ் மக்கள் அளித்து வரும் ஆதரவு மறக்க முடியாதது. எமது கட்சி இந்தத் தேர்தலில் பெரு வெற்றியை அடையும் என்பது எனது பூரண நம்பிக்கை. மக்கள் அளித்துவரும் ஆதரவும் ஓர் எடுத்துக்காட்டு. கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. பொன் குமாரசாமி உட்பட பலர் உரையாற்றினர்கள்.

# வட்டுக்கோட்டை சுதந்திரக்கட்சி ஏஜெண்ட்

(பண்டத்தரிப்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வட்டுக்கோட்டைத் தொகுதி தேர்தல் ஏஜண்டாக தொகுதி அமைப்பாளர் திரு வீ. இராசசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் ஜனதிபதி தேர்தலில் திரு. இராசசுந்தரம் இக்கட்சியின் தேர்தல் ஏஜண்ட்டாக வட்டுத் தொகுதியில் கடமையாற்றுவார்.

# சாரணருக்குப் பாராட்டு

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி சாரணர்இயக்க மாணவர்கள்பருத்தித்துறைப்பொலிசாரின் பாராட்டைப்பெற்றுள்ளனர்.

அண்மையில் சரித்திரப் பிரசித்திபெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் நடைபெற்ற போது ஆலயத்திற்கு வருகை தந்த அடியார்களுக்கு பாதுகாப்பு ஏற்படுத்துவதற்கும் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் இக்கல்லூரி சாரண இயக்கத்தினர் சிறப்பாகஇயங்கி பொலிசாருக்கு ஒத்துழைப்பு வழங்கியமையினலேயே பொலிசார் இச்சாரணர் இயக்க மாணவர்களைப் பாராட்டியுள்ளனர்.

வல்லிபுர ஆழ்வார் ஆலய தேவஸ்தான சபையினரும் ஹாட்லிக் கல்லூரி சாரணர் இயக்க மாணவர்களின் சிறந்த சேவையைப் பாராட்டி நன்றி தெரிவித்துள்ளனர்.

# பாராளுமன்றத்திற்குள் நுழைய முயன்ற

# சீக்கியர் மீது துப்பாக்கிப்பிரயோகம்! 4 பேர் பலி

## பொலிஸார் உட்பட பலர் காயம்

புதுடில்லி அக் 12

இந்திய பாராளுமன்றத்திற்குள் வாளுடன் நுழைய முயன்ற சீக்கியர்கள் மீது காவலில் நின்ற பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததை தொடர்ந்து நான்கு பேர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

தலைப்பாகைகள் அணிந்த சீக்கியர்கள் பலர் பாராளுமன்றக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது உள்ளே புகமுற்பட்டனர். இவர்களைத் தடுக்கும் வகையில் கண்ணீர்ப் புகைப்பிரயோகத்தை பொலிஸார் மேற்கொண்டனர். இதற்கும் அவர்கள் அடங்கி விடாததையடுத்தே நிலைமை மோசமாவதைத்தடுக்க துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட சீக்கியர்கள் கைகளில் கூரிய நீண்ட வாள்களை வைத்திருந்தனர். இவர்களது நடவடிக்கைகளால் பாராளுமன்றத்தில் நின்ற பொலிஸார் சிலரும் காயத்துக்குள்ளானர்கள்.

கடந்த மாதம் அகாலிதள பிரமுகர்கள் 31 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வாகனமொன்றில் ஏற்றிச் செல்லப்பட்டபோது அவ்வாகனம் ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 31 சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்தவேண்டுமென்பதே நேற்றைய ஆர்ப்பாட்டர்களின் பிரதான கோஷமாக இருந்தது. (கி)

எழுதுமட்டுவாள் கொலை, கொள்ளை

## சந்தேகநபர் அணிவகுப்பில் அடையாளம் காணப்பட்டார்

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாள் கொலை-கொள்ளைச்சம்பவம் தொடர்பாக நடந்த அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டார்.

அடையாள அணிவகுப்பு சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. வே. கனகசபை முன்னிலையில் நடைபெற்றது

கடந்த மாதம் எழுதுமட்டுவாள் ஆசைப்பிள்ளை ஏற்றத்தில் கடையொன்றில்நுழைந்த கொள்ளைக்கோஷ்டி பயங்கர ஆயுதங்களைக் காட்டி ரொக்கப்பணம்ரூபா 2,200ம் 24,521 ரூபா பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றனர். இச்சம்பவத்தின் போது ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

இதுசம்பந்தமாக நடந்த அடையாள அணிவகுப்பில் வத்தளையைச்சேர்ந்த இராசவிக்கினேஸ்வரன் என்பவரை கடையில் இருந்த வேலுப்

(7-ம் பக்கம் பார்க்க)

## மே.ஜெர்மன்வங்கிக்கொள்ளை

# இருவர் கைது!

லண்டன் அக் 12

கடந்தவாரம் மேற்கு ஜெர்மனியின் கொப்லென்ஸ் என்ற இடத்திலுள்ள வங்கியொன்றில் ஊழியர்களைப் பணயக் கைதிகளாகவைத்துபலகோடிக் கணக்கான ரூபாய்களை கொள்ளையடித்துச் சென்றவர்களில் இருவரை ஜெர்மன் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

இவர்களிருவரும் கொள்ளையடிக்கப்பட்ட இப்பெருந் தொகையில் பெரும்பங்கொன்றினைக் கொண்டு சென்றபோதே பொலிஸாரிடம் அகப்பட்டனர். இவர்கள் கைதான போது ஆயுதங்களையும் தம்முடன் வைத்திருந்தனர். இவர்களைப் பற்றிய விபரங்கள் எதுவும் மேலும் தெரிவிக்கப்படவில்லை. ஆயினும் இவர்களது சகாக்களைத் தேடும் முயற்சிகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இந்த வங்கிக் கொள்ளை மேற்கு ஜெர்மனியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. (கி)

“ஜே. ஆர். ஆட்சியில்

# பொருளாதாரம் சிதைந்துவிட்டது!”

– டாக்டர் கொல்வின்

(புலோலி)

“இன்றைய ஐ தே. கட்சி அரசாங்க ஆட்சியிலே நாட்டின் பொருளாதாரம் சின்னா பின்னப்படுத்தப் பட்டுள்ளது. குற்றச்செயல்கள் மிக மோசமான நிலையை அடைந்துள்ளன; பொலிசார் நிலையைக் கட்டுப்படுத்தமுடியாமல் உள்ளனர். சமுதாயக் சட்டுக்கோப்பு சீர்குலைந்துள்ளது. இந்நிலையை நீக்க மக்கள் சிறந்த ஜனாதிபதி ஒருவரைத் தெரிவுசெய்யவேண்டும்”

இவ்வாறு பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற லங்கா சமசமாஜக்கட்சிக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி வேட்பாளர் கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா குறிப்பிட்டார். சட்டத்தரணி ஆர். உருத்திரா கூட்டத்திற்குத் தலைமைவகித்தார் தொடர்ந்து உரையாற்றிய கொல்வின் ஆர். டி. சில்வா குறிப்பிட்டதாவது.

“தற்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவின் 5 வருட ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் சின்னாபின்னப்படுத்தப்பட்டு நாடு அழிவுப்பாதையில் சென்று மக்களுக்குப் பேராபத்து ஏற்படக்கூடிய நிலை உள்ளது. இந்நிலையிலே இந் நாட்டின் சகல வல்லமையும், சர்வாதிகாரமும் படைத்த ஜனாதிபதி ஒருவரை தெரிவுசெய்வதற்காக உங்கள் முன் வந்துள்ளோம். இன்றைய ஜனாதிபதி பாராளுமன்றத்தின் உரிமைகளைப் பறித்துத் தனது கைக்குள் போட்டுள்ளார், கடந்த 5 வருடங்களில் நாட்டில் நடைபெற்ற சகல நடவடிக்கைகளுக்கும் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனவே பொறுப்பு. இதிலிருந்து அவர் தப்பித்துக் கொள்ளமுடியாது.

“வடபகுதியிலும் யாழ்குடாநாட்டிலும் ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தனவின் ஆட்சியில் பல கொடூரமான பயங்கரச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன, யாழ் மாவட்டத்தில் இராணுவ ஆட்சிதான் நடைபெற்றது. பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்த இம்மாவட்டத்தில் ஜே ஆர் ஜயவர்த்தன இராணுவபலத்தைக் கொண்டே ஆட்சி நடத்தினார். ஜே ஆர் ஜயவர்த்தன தேர்தல்சம்பந்தமாக வாக்குக் கேட்டு அண்மையில் வந்தபோது “அம்புலன்ஸ்” வண்டியையும் கொண்டே வந்தார். இது போன்ற நிலை உருவாகிவிட்டால் அந்த ஆட்சியாளர்கள் ஆட்சியைவிட்டு விலகிவிடவேண்டும்”.

## ★ மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி

## தீர்மானம் பற்றிய செய்தி:

# பட்டிருப்பு எம். பி. மறுப்பு

5-10-82 செவ்வாய்க்கிழமை ‘ஈழநாடு’ பத்திரிகையில் “ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பில் கலந்துகொள்ள மட்டக்களப்புமாவட்டக்கூட்டணி தீர்மானம்” என்ற தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட செய்தி உண்மைக்குப் புறம்பானது. கடந்த ஞாயிற்றுக்கிழமை 3ம் திகதி ஐப்பசி மாதம் எனது கல்லாற்று இல்லத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி பட்டிருப்புக் கிளைக்கூட்டம் நடந்தது. இதில் கல்குடாத் தொகுதியின் கிளைத் தலைவர் சி. சம்பந்தமூர்த்தியும் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது போல ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பில்தமிழர்விடுதலைக் கூட்டணி கலந்து கொள்ள வேண்டும் என்றதீர்மானமோ, வேறு எந்தவொரு தீர்மானமோ நிறைவேற்றப்படவில்லை. 6-10-82ல் புதன் கிழமை “வாக்களிக்கவிரும்பும் கூட்டணி ஆதரவாளர்கட்கு நாம் தடையாக இருக்கக் கூடாது பட்டிருப்பு எம். பி. கூறுகிறார்” என்ற தலையங்கத்தின் கீழ் தலைமைப் பீடத்தின் தீர்மானத்துக்கு எதிராகச்செயல்பட வேண்டும் என்றே மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணிஆதரவ ளர்களாகிய நாம் அனுதரவாகவே இருந்து வருகின்றேம் என்றே இத்தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனத் தீர்மானித்து விட்டு தலைவர்கள்முக்கியமற்ற விடயங்களைச் சாட்டாக வைத்து வெளிநாடு சென்று விட்டனர் என்றே, எனவே கூட்டணி ஆதரவாளர்களாகிய நாமே உணர்ச்சிவசப் படாது நிதானமாகச்சிந்தித்து வாக்களிக்கவேண்டும் என்றே எனது உரையில் எந்த ஒரு கட்டத்திலும் நான் கூறவில்லை. கூட்டணி ஆதரவாளர்கள் கூட்டணித் தீர்மானத்துக்கு அமையவே செயல்படவேண்டுமென எனது உரையில் வலியுறுத்திக் கூறியுள்ளேன். எனவே 5-10-82லும், 6-10-82லும் உங்கள் பத்திரிகையில்பிரசுரிக்கப்பட்ட கருத்துக்கள் யாரோ விஷமிகளால் எனது அரசியல் கருத்துக்களுக்கு முரண்பாடாகத்திட்டமிட்டு தலைவர்களையும் என்னையும் சிண்டுமுடியும் நோக்கத்துடன் உங்கள்பத்திரிகைக்கு அனுப்பப்பட்டுள்ளது. உங்கள் பத்திரிகையில்பிரசுரிக்கப்பட்டதுபோல எந்தவொரு மட்டக்களப்பு மாவட்ட கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டமும் நடைபெறவில்லை. 3-10-82ல் நடைபெற்றது பட்டிருப்புத்தொகுதிக் கிளைக்கூட்டமே. இது போன்ற அன்று மாலை கல்குடாத் தொகுதியிலும் தொகுதிக்கிளைக் கூட்டமும் நடைபெற்றது. அக் கூட்டத்திலும் நான் கலந்து கொண்டு உரையாற்றினேன். மட்டக்களப்புத் தொகுதிக் கிளைக்கூட்டம் இதுவரையும் நடைபெறவில்லை.

உங்கள் மட்டக்களப்பு நிருபர் இரா. துரைரத்தினம் பட்டிருப்புத்தொகுதிக்கிளைக் கூட்டத்துக்கு சமூகமளிக்கவில்லை என்பதை நான் திட்டவட்டமாகக் கூறமுடியும். கூட்டம் முடிந்த பின்னர் கூட அவர் அக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த என்னையோ அல்லது பட்டிருப்புத் தொகுதிக்கிளையின் பொறுப்பு வாய்ந்த பதவி வகிக்கும் எவரையோ சந்திக்கவில்லை”.

பூ. கணேசலிங்கம்
எம். பி.
(பட்டிருப்பு)

குறிப்பு:

‘ஈழநாடு’ மட்டக்களப்பு நிருபரிடம் இதுபற்றிவிசாரிக்கப்பட்டபோது; தாம் கூட்டத்திற்குச் சென்றிருந்ததாகவும் சரியான செய்தியையே தாம் அனுப்பிவைத்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

—ஆசிரியர்

## “சிங்கள மீனட்சியென என்னைக் கேலிசெய்தனர்”

### பருத்தித்துறையில் திருமதி விவியன்

(புலோலி)

“ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்க காலத்தில் யாழ். பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் மக்கள் இந்நூலகத்தை புனரமைப்புச் செய்ய முயற்சிகளை மேற்கொண்டபோது முதன் முதலாக சமசமாஜக் கட்சியே 7,000 புத்தகங்களை நூல் நிலையத்திற்கு வழங்கியது. லங்கா சமசமாஜக் கட்சிக்கு இந்நாட்டில் எதுவித சாதி, மத, இன பேதமும் இல்லை. நாட்டின் அபிவிருத்தியும் மக்கள் பாதுகாப்புமே அதன் குறிக்கோளாகும்.

இவ்வாறு, பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற லங்கா சமசமாஜக்கட்சியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் எம். பி. திருமதி விவியன் குணவர்த்தன குறிப்பிட்டார். சட்டத்தரணி ஆர். சதானந்தன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய திருமதி விவியன் குணவர்த்தன குறிப்பிட்டதாவது;

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிற்கும் அறுவரில் திரு. கொல்வின் ஆர் டி. சில்வாவே சகல வழிகளிலும் தகுதியானவர். 50 வருடங்களாக மக்கள் சேவையில் ஈடுபட்டு மக்களுக்காகவே உழைத்து வருகின்றார் இவர் மக்கள் சேவையில் ஈடுபடாமல் சுயநலம் கருதி இயங்கியிருந்தால் இன்று ஒரு உன்னத நிலையில் இருந்திருப்பார். ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றியபோது மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்தனர். அப்போதய அரசாங்கத்தை எதிர்த்துப் போராடி கைது செய்யப்பட்டார். அமரர் என். எம். பெரேராவும் எதிர்த்துப் போராடிய படியால் கைது செய்யப்பட்டார். இவர்களினால் அரசாங்கத்திற்குப் பெரும்பிரச்சினை ஏற்பட்டமையால் இவர்களைச் சுட்டுக் கொல்லும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது ஆனால் இவர்கள் சிறையையும் உடைத்துக் கொண்டு இந்தியாவிற்கு ஓடித்தப்பினர்.

1956ம் ஆண்டு எஸ். டபிள்யூ பண்டாரநாயக்கா தனிச் சிங்கள சட்டத்தைக் கொண்டு வந்தபோது தமிழ், சிங்கள இனவாதத்தைக் ஏற்படுத்தக் கூடாதெனக்கோரி போராடினோம். ஆனாலும் அவர் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தார். நாங்கள் நடத்திய கூட்டமொன்றிலே எமது தலைவர் திரு. கொல்வின் ஆர் டி. சில்வாவை நோக்கி எறிதண்டு வீசப்பட்டது. அது றெஜி மெண்டிஸ் சின் கையைப் பாதித்தது. கைபாதிக்கப்பட்ட மெண்டிஸ் இன்று இங்கே இருக்கின்றார். என்னை சிங்கள மீனட்சி எனக் கேலி செய்தராகள். எங்களைக்

7ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

தீமையானது கடன்களை வளர்த்து செலுத்துவிக்கின்றது. நன்மையோவெனில் கடன்களிலிருந்து விடுவித்து விடுதலையும் அளிக்கின்றது.

— எட்வின் ஆர்னோல்ட்.

# நமது நோக்கு

## போலந்து தரும் பாடம்

இன்றைய உலகில் எந்த ஒரு நாடும் தனித்து தனக்கென ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு வளர்வதென்பது சிரமசாத்தியமாகவே தோன்றுகின்றது.

வெளிநாட்டுத் தலையீடு அல்லதுமேலாதிக்கநெருக்குதல்ஒருபுறம் மறுபுறம்உள்நாட்டு எதிர் சக்திகளின் நெருக்குதல் வன்முறை-ஒத்துழையா போக்கு; தவிரவும் அரசுகளின் சமூக விரோத நடவடிக்கைகளினால் எழும் இயற்கையான உள்நாட்டுக் கொந்தளிப்புகள், வேலை நிறுத்தங்கள் இளைஞர் சமுதாயத்தின் விரக்திப் போராட்டங்கள் பேன்றவற்றிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அதிகாரபீடம் வெளிசக்திகளின் ஆதரவை நாடி மண்டியிடும் நிலைமை!

நாடுகள் சுதந்திரமாக-தனித்துவமாக செயல்படமுடியாமைக்கு இந்த நிலைமை ஒரு காரணம் எனலாம். இதனின்றும் விடுபட்டுக்கொள்ளும் முகமாகவே வளரும் நாடுகளின் அணியென்றும் கிழக்காசிய நாடுகள் ஸ்தாபனமென்றும் அணிசேரா நாடுகள் என்றும் இயக்கங்கள் தோன்றியுள்ளன.

இந்த இயக்கங்களில் கம்யூனிஸத்தை அனுசரித்தும் கம்யூனிசக் கோஷ்டிக்குள் சேராத நாடுகளையும் முதலாளித்துவத்தை கடைப்பிடிக்கும் முதலாளித்துவ நாடுகளின் மேலாதிக்கத்தை விரும்பாத நாடுகளையும் மாத்திரமின்றி மேற்கூறிய இருவித மேலாதிக்க நாடுகளிலும் காண முடியாத தமக்கே உரிய கலப்பு. சமூகப் பொருளாதார அமைப்புக்களை உருவாக்கிக் கொண்டு வளர்ந்து வரும் நாடுகளையும் காணமுடிகிறது.

உலகின் எதிர்கால அமைதிக்கும் உறுதிப்பாட்டுக்கும் இந்த நாடுகளே பெரிதும் உதவியாக இருக்கப்போகின்றன என்பது தெளிவு. என்றாலும் எந்தஒருநாடும் தன் சுயதன்மையை விட்டுக்கொடுத்து மேலாதிக்க வல்லரசுகளின்தயவைநாடமுற்படுமானால் அதற்கு விடிவுமில்லை; நிம்மதியுமில்லை என்பதை கண்கூடாகக் காண்கின்றோம்.

போலந்து விவகாரத்தை இதற்கு ஒரு உதாரணமாகக் கொள்ளலாமா?

கம்யூனிஸ ராணுவ ஆட்சியாளர்களின் கெடுபிடிகளுக்குகடும் எதிர்ப்பு தெரிவித்துவந்த சுதந்திர தொழிற் சங்க சம்மேளனம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் கலைக்கப்பட்டுவிட்டது.

கம்யூனிஸ நாடுகளில் அரசு சார்பற்ற தொழிற் சங்கங்களுக்கு இடமில்லை. ஆனால் அது, போலந்தில் ஒரு விதிவிலக்காக- தனித்தன்மையாக விளங்க முடியும் என்று சமீபகாலம்வரை கருதப்பட்டது. தொழிற் சங்கத் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டும், தொழிற் சங்கங்கள் நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டும் கடும் எதிர் நடவடிக்கைகளின் பின்னர் இப்போது அத் தொழிற் சங்கத்தையே அரசு கலைத்து விட்டுள்ளது.

முதலாளித்துவ நாடுகளில் இயங்கும் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் தொழிற்சங்க உரிமைகளுக்காகப்போராடி வரும் வேளையில் ஒரு கம்யூனிஸ்ட் நாட்டில் தொழிற் சங்க இயக்கமே கலைக்கப் பட்டுள்ளது.

மாஸ்கோவின் கட்டளைகளைச்சிரமேற்கொள்ளவேண்டிய நிலையிலேயே போலந்து அரசு இந்த நடவடிக்கையில் இறங்கியதாக கூறப்படுகின்றது. அவ்வாறாயின் போலந்து மக்கள் கம்யூனிஸத்தைப் பின்பற்றினாலும் தமது நாட்டுக்கென்றொரு தனித்துவக் கொள்கையை கடைப்பிடிக்க முடியாதவர்களாகவே உள்ளனர் எனலாம். சோவியத் மேலாதிக்கம் இவ்வாறிருக்க அமெரிக்காவின் கெடுபிடி நடவடிக்கைகளும் ஒய்ந்துவிடவில்லை. போலந்துக்கான வர்த்தக வசதிகளைத் தடைசெய்துள்ளார் அதிபர் றீகன். இந்தச் செயல் எந்த அளவுக்கு அமெரிக்காவுக்கு பயனளிக்கப் போகின்றது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இதேசமயம் போலந்தில் தலைமறைவாக உள்ள தொழிற்சங்கவாதிகள் அரசுக்கு எதிராக பெரும்எடுப்பில் வேலை நிறுத்தப் போராட்டங்களை ஆரம்பிக்க மறைமுகமான நடவடிக்கை எடுத்து வருவதாக செய்திகள் கூறுகின்றன.

மாஸ்கோவின் பணிப்பும் ராணுவ ஆட்சியின் கெடுபிடியும், அமெரிக்காவின் தடையும் தொழிற்சங்கவாதிகளின் கொந்தளிப்பும் போலந்து வாழ் மக்களின் எதிர்கால சுபீட்சத்துக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளன.

ஏனைய நாடுகளுக்கு இது ஒரு படிப்பினையும்தான்.

தேவாரங்கள் மீதுள்ள

# உயர்மதிப்பினாலேயே அக்கருத்தைக் கூறினேன்

-- பேராசிரியர் கே. கைலாசநாதக்குருக்கள் --

தேவார திருவாசகங்கள் தமிழ்வேதம் என ஆணித்தரமாக எடுத்துரைத்தவர் ஆறுமுகநாவலரவர்கள். தேவாரம் வேதசாரம் என்பதற்கு அரிய நூல் மூலம் சிறந்த விளக்கம் தந்தவர் நாவலர் பரம்பரையிலே வந்த காசிவாசி செந்திநாதையர் அவர்கள். வேத நெறி தேவாரங்களிலே. திருவாசகத்திலே தழைத்தோங்கியது என்பது இவர்கள் கருத்து. இதில் இம்மியளவேனும் சந்தேகத்திற்கிடமில்லை.

இற்றைய சூழ்நிலையில் தேவாரங்களின் மீது பெருமதிப்பும், தேவாரங்கள் வேதங்களெனப் போற்றப்படுவதற்குரியன என்ற கருத்தும் ஆஸ்தீக சைவர்கள் மனதில் ஆழமாக வேரூன்றி, தேவார திருவாசகங்கள் தேவாலயங்களில் மிகுதியாகப் பிரயோகம் பெற வேண்டும் என்ற ஆர்வமும் வளர்ந்து வருவது ஆஸ்திகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் அறிகுறி.

மரணக்கிரியைகள் நிகழும் பொழுது இக்கிரியைகளுக்கென விதிக்கப்பட்ட வேதாகம மந்திரங்களைத் தவிர வேறு மந்திரங்களை பிரேத கிருத்தியங்களுக்கு பயன்படுத்துவது மரபன்று. இவ்வாறு பிரேத கிருத்தியங்களுக்கு பயன்படும் மந்திரங்களை மாணவர்களுக்குப் படிப்பிக்கும் வேளை ஆற்றங்கரை, குளக்கரை போன்ற ஒதுக்கிடங்களிலே ஒழிய வீடுகளில் அமங்கலமான மந்திரங்களைச் சொல்லிக்கொடுப்பதில்லை. இம்மந்திரங்கள் மரணக்கிரியைகளில்மட்டுமேபயன் பெறுபவை.

பிரேதம் வீட்டில் இருக்கும் பொழுது மட்டுமல்லாமல் அது அகற்றப்பட்ட பின்னரும் அதைத் தொடர்ந்து நிகழும் சபிண்டீகரண கிரியை வரை "பிரேத" என்ற சொல் இறந்தவரைக் குறிக்க கிரியைகளில் அடிக்கடி பிரயோகம் பெறும். சபிண்டீகரணத்தின் பின்னரோவெனின். 'பிரேத' என்ற சொல் மறைந்துவிடும் பிதிர் என்ற சொல்லே தொடர்ந்து பிரயோகம் பெறும். இப்பிதிர் சப்தம் பிரயோகம் பெறத்தொடங்கும் பொழுதுதான் வீட்டில் தூய்மை பிறக்கும். வீடு சுத்தமான இடமாகும்.

பிரேதம் எனப்படும் சவம் வீட்டில் இருக்கும்பொழுதோ அதன்பின் சபிண்டீகரணம் வரையிலோ அசுத்தம் நிலவும் இடத்தில் வேதங்களையோ வேதங்களுக்கு நிகரெனக் தமிழ் சைவ மக்கள் போற்றும் தமிழ் வேதங்களையோ படித்தல் கூடாது என்ற கருத்தே சைவ மகாநாட்டில் என்னால் வற்புறுத்தப்பட்டது. இது தேவாரங்கள் மீது உள்ள உயர் மதிப்பினாலேயே என்பது ஆர அமர சிந்திப்பவர் மனதில் தெளிவாகப் பதியும்.

வேதங்கள் ஓதுவதற்குரியன. தேவார திருவாசகங்களுமப் படியே. இக்கருத்தையே நாவலர் அவர்களின் சைவவினாவிடை முதலாம் புத்தகத்தில் 119-ம் வினாவுக்கு விடையாகத் தந்துள்ளார்கள். மேலும் 133-ம் வினாவுக்கு விடையாக ஓதுவதற்கு யோக்கியர் யார் என்பதையும், எப்படி ஓதுவது என்பதை 134-ம் வினாவுக்குரிய விடையிலும் நாவலர் அவர்கள் தெளிவாகக் கூறுகின்றார்கள்.

134 ம் வினாவுக்குரிய விடையின் தொடக்கத்திலேயே எங்கள் பிரச்னை பற்றி நாவலர் அவர்களுடைய கருத்துத் தெளிவாகக் கூறப்படுகின்றது. 'சுத்தி செய்யப்பட்ட இடத்தில்' எனத் தொடங்குவது இவ்விடை. பிரேதம் இருக்கும் இடம் எவ்வளவுக்கு பெருக்கிக் கழுவித் துடைத்தாலும் சுத்தியாகாது என்பது எங்கள் வேதாகம சைவப்பாரம்பரியம் இதுவே எங்கள் சமயானுஷ்டானத்தின் உயிர்நாடி. இதனால் தான் அதாவது பிரேதம் இருக்கும் இடம் அசுத்தமானதான். நீராடுதல் முதலியவற்றால் தமமைச் சுத்திகரித்துக் கொண்டே அங்கு சென்றுள்ள வளாவியவர்கள் யாவரும் தத்தம் வீடுகளுக்குள் நுழைவர். இவ்வாறு தம்மைச் சுத்தமாக்காது அன்னபானாதிகளையுமுட் கொள்ளார். பிரேதம் வெளியேற்றப்பட்டதும் முதலில் வீட்டைக் கழுவுவார்கள் பிரேதம் இருக்குமிடத்தில் குறிப்பிட்ட எல்லைக்குள இருக்கும் திருக்கோயில்களில்கூட பிரேதம் அகற்றப்படும் வரை பூசை நிகழாது கோயில்பூட்டி வைப்பது, பிரேதம் வெளியேறிய மாத்திரத்தே கோயில் கழுவிப் பிராயச்சித்தாதிகள் நிறைவேறியபின் விடுபட்ட பூசைகள் நிகழ்வதும் எல்லோரும் அறிந்ததே.

### யாருக்காக?

மேலும், சைவவினாவிடை முதற் புத்தகத்தில் 135ம் வினா தமிழ் வேதத்தை அன்புடனே நியமமாக ஓதினவர் யாது பயன்பெறுவார் என்றவினாவுக்கு நாவலர் அவர்கள் "சிவபெருமானுடைய திருவடிக்கீழ் பேரின்பத்தை அனுபவிப்பர்" என விடை பகரக்காணலாம். தாமே வாழ்க்கையில் இவ்வாறு

(5ம் பக்கம் பார்க்க)

# அன்னையிடம் சமாதானம் வேண்டி செபமாலை ஓதிடுவோம்!

1917-ம் ஆண்டு வைகாசி 13 முதல் உலகெங்கும் பரபரப்பு. போர்த்துக்கலிலுள்ள கோவா தா ஈரியா மலைச்சாரலிலுள்ள பற்றிமாவில் புனித மரியன்னை 1917-ம் ஆண்டு வைகாசி 13 முதல் ஐப்பசி 13 வரை லூசியா யசிந்தா பிரான்சிஸ் என்ற 10, 9, 7 வயதுச் சிறார்களுக்கு திருக்காட்சி நல்கினாள். இது உண்மையா இல்லையா என்பதே உலகின்பரபரப்புக்குகாரணம். ஆத்தீகவாதிகள் இறைவனின் பெருங்கருணை இது என்றனர். நாத்மீகவாதிகள் இது நம்ப முடியாத நாடகமென்றனர். இந்நிலையில் புனித மரியன்னை ஐப்பசி 13-ல் தான் தன்னுடைய திருக்காட்சியின் உண்மையை உலகிற்கு நிரூபிப்பதாக அப்பிள்ளைகளுக்கு வாக்குறுதி அளித்திருந்தாள். இதனால் மெய்யானிகள், விஞ்ஞானிகள் பக்தர்கள், பாமரர்கள் என ஒரு பேரணியே அந்த மலைச்சாரலில் திரண்டிருந்தது.

### பத்திரிகைகள எழுதியவை

இதுபற்றிக் காட்சி முடிந்த பின் அக்டோபர் 15-ம் நாளிதழில் ஆத்தீக சார்புடைய பத்திரிகையான 'O Seculo' வின் பத்திரிகை நிருபரான அவெலினோ தல்மேய்தா எழுதியதை அப்படியே இங்கு தருகிறேன்.

"அப்போது நாங்கள் கண்டது அங்கு நேரில் காணாதவர்களால் நம்பக்கூடாத ஒரு காட்சியாயிருந்தது... அவ்வளவு ஒளியில்லாத வெள்ளித் தட்டுபபோல் சூரியன் காணப்படுகிறது... அதலே உஷ்ணம் இல்லை. அந்தஒளி கண்களைக் கூசச்செய்யவில்லை ஏதோ ஒரு கிரகணம் நடப்பது போலிருந்தது எனலாம். ஆனால் அப்போது ஓர் உரத்தகுரல் கேட்டது. "அற்புதம்! அற்புதம்"

பற்றிமாகரன்

ஒன்றுஜனக்கூட்டத்தின் மனப்பான்மை பழைய வேதாகம காலங்களிலுள்ள மக்களின் தன்மைபோலிருந்தது. அவர்கள் கண்களெல்லாம் ஆச்சரியத்தால் நிறைந்திருக்கின்றன. முகங்கள் அச்சத்தால் வெளுத்துக் காணப்படுகின்றன. ஒருவர் தலையும் மூடப்படவில்லை. எல்லோரும் நீலவானத்தையே நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். சூரியன் நடுங்குகின்றது. அங்குமிங்கும் குதித்து அசைகிறது. இதுபோல் ஒருபோதும் கண்டதில்லை. வானசாஸ்திர விதிகளையெல்லாம் மீறி சூரியன் நடனமாட ஆரம்பிக்கிறது சாதாரண மக்கள் அவ்வாறுதான் இந்த ஆட்டத்தைக் குறிப்பிடுவர். ஒரே ஒரு காரிம் தான் இனிச் செய்யப்படவேண்டும். அதாவது விஞ்ஞானிகள் தங்கள் அறிவின் உச்சநிலையிலிருந்து இந்த எதிர்பாராத ஆச்சரியமான சூரிய நடனத்துக்கு ஒரு விளக்கம் கொடுக்கவேண்டும். இந்த சூரிய அதிசயம் பாத்துமாவில விசுவாசிகள் யாவருடைய இதயங்களிலும் "ஓசான்னா" என்ற வாழ்த்து ஒலிக்கச்செய்

(8-ம் பக்கம் பார்க்க)

## வீடு கட்ட பணவசதி

வீடில்லா பிரச்னை நாட்டின் அதிமுக்கிய பிரச்னைகளில் ஒன்று என்பதைச் சொல்லத் தேவையில்லை

உணவு, உடை, அடுத்து உறையுள் என்ற வகையில் மக்களின் குடியிருப்பு விடயத்தில் பதவியிலிருக்கும் எந்த அரசும் அக்கறை காட்டவேண்டியதுகடமை.

முன்னைய அரசு இந்தவிடயத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டபோதிலும் தீவிரமான வீடமைப்புத் திட்டங்களை செயல்படுத்துவதில்ஈடுபடவில்லை. எனினும் வீடமைப்புக் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து நடுத்தர வருமானமுள்ளவர்களும் ஏழை விவசாயிகள், தொழிலாளர்களும் தாமே சுயமுயற்சியில வீடுகளை அமைத்துக் கொள்ள உதவப்பட்டது. இந்த வசதியை சிலர் துஷ்பிரயோகம் செய்து வீணடித்ததும், இன்னும் சிலர் கடனைத் திருப்பிக்கொடுப்பதில் தில்லுமுல்லு புரிந்ததும் வேறுவிடயம்.

இன்றைய அரசுபதவிக்கு வந்த பிறகு திடீரென வீடமைப்புக்கடன் வழங்குவது நிறுத்தப்பட்டது. பரந்த அளவில் நாடு பூராவும் ஏராளமான வீடுகளையும், மாதிரிக் கிராமங்களையும் அமைப்பதில் அரசு அக்கறை எடுத்தாலும், வீடமைப்புக் கடன் வாங்கியவர்களில் பெரும்பாலானவர்கள் திருப்பிக்கொடுக்க முன்வராமையாலும் அரசு இந்த நடவடிக்கையை எடுக்க நேர்ந்ததாகக் கூறப்பட்டது.

இதுவே உண்மை நிலை என்றாலும் அரசிடம் போதிய அளவு பணம் கையிருப்பில் இல்லாது போனதும் ஒரு காரணம் என்பது இப்பொழுது புலனாகின்றது.

பத்திரிகை செய்திகளின் படி நடுத்தரவகுப்புக்களைச் சேர்ந்தவர்களுக்கு இலகுவான வட்டி விகித அடிப்படையில் அரசு கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு உதவ இரு தென்கிழக்காசிய வங்கி நிறுவனங்கள் முன் வந்துள்ளனவாம். இந்த வங்கிகள் வழங்கும் பெருந்தொகைப்பணம் அரசின் வீடமைப்புடக்கடன் வழங்கும் வங்கிகளுக்கு கிடைக்கும். இதன்மூலம் நடுத்தர வகுப்பினர் வீடுகளைக்கட்டிக்கொள்ள மீண்டும் கடன் வசதிகளைப் பெறமுடியும்.

இது வெறும் பத்திரிகைச் செய்தியாக மட்டும்இருந்துவிடாமல் வீடுகட்டிக் கொள்ள பணவசதியின்றி கஷ்டமுறும் மத்திய வகுப்பினருக்கு விரைந்து நிவாரணம் கிடைக்க உதவ வேண்டும்.

# டேவிற்சன் கைது:

## அப்பட்டமானஜனநாயகமீறல்

### கம்யூனிஸ்ட் (இடது) கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு கோரி ஏழு அமைப்புக்களின் சார்பில் துண்டுப்பிரசுரம் அச்சிட்டு விநியோகித்த டேவிற்சனும் ஏனைய இளைஞர்கள் சிலரும் கைது செய்யப்பட்டதும் தாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதும் வடமாகாணத்திற்கு அப்பால் கொண்டுசெல்லப்பட்டதும் மோசமான ஜனநாயக மீறல் நடவடிக்கையாகும். இச்செயலை எமது இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி [இடது] வன்மையாகக் கண்டிக்கிறது''

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) சார்பில் திரு. கே ஏ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் அண்மையில் விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் சட்டரீதியான ஜனநாயக ரீதியான அரசியல் நடவடிக்கைகளுக்கு எவ்வித தடைகளும் இருக்க மாட்டாது எனக் குறிப்பிட்டிருந்தார். அப்படியாயின் சட்டரீதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் துண்டுப்பிரசுரம் வெளியிட்டு சுதந்திரமான கருத்தை முன் வைத்த டேவிற்சனும் ஏனைய இளைஞர்களும் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது ஏன்? இது அப்பட்டமான ஜனநாயக மீறல் சம்பவமாகும்.

டேவிற்சன்மீது அரசு தொடுத்துள்ள அடக்குமுறை நடவடிக்கைகளையும் ஜனநாயக விரோதச் செயல்களையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். டேவிற்சனையும் ஏனைய இளைஞர்களையும் உடன் விடுதலை செய்யவேண்டும். அல்லது சாதாரண சட்டங்களின்கீழ் நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்ய வேண்டும் என எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வற்புறுத்துகின்றது என்றும் திரு. சுப்பிரமணியம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## அவசரக் கோரிக்கை

(கிளிநொச்சி)

பளைப் பகுதியில் மீண்டும் பொலிஸ் நிலையத்தை இயங்க வைக்குமாறு கிளிநொச்சித் தொகுதி ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு நாயகம் சிற்றம்பலம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, பாதுகாப்பு அமைச்சர், பொலிஸ் மா அதிபர் ஆகியோரை அவசரத் தந்தி மூலம் கேட்டுள்ளார்.

பளையில் இயங்கி தற்போது சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையம் இங்கு இயங்காததினால் இக்கிராமங்கள் மிகுந்த சிரமத்தை அனுபவிக்கின்றனர் எனவும் இத்தந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)

## மௌன விரதம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை அணியினர் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணிவரை நந்தைசெல்வா நினைவாலயத்தில் மௌனவிரதம் அனுஷ்டிக்கவுள்ளனர்.

ஈழமாணவர் பொதுமன்றத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. டேவிட்சன் உட்பட ஏனைய இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதையும், ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுவதையும் ஆட்சேபித்து மௌன விரதம் அனுஷ்டிக்கவேண்டுமென்று தமிழீழவிடுதலை அணியின் செயற்குழுக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. இந்த முடிவின்படி வியாழக்கிழமை பிற்பகல் மௌனவிரதம் அனுஷ்டிக்கவிருக்கின்றனர்.

அன்றுபிற்பகல் 5 மணிக்கு டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் தலைமையில் கருத்தரங்குநடைபெறவுள்ளது.

# "டேவிற்சனையும், தமிழ் இளைஞரையும் உடன் விடுதலை செய்வோம்"

### ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உபதலைவர் உறுதி

(சுன்னாகம்)

''ஜனாதிபதித் தேர்தலில் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ, வெற்றியீட்டியதும், உடனடியாக ஈழத்தமிழ் மாணவர் மன்றச் செயலாளர் திரு. டேவிட்சன் உட்பட அனைத்து இளைஞர்களையும் விடுதலை செய்வோம்'' என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உபதலைவர் திரு. கே. சண்முகலிங்கம் சுன்னாகம் சந்தை மைதானத்தில் ஜனாதிபதி வேட்பாளர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவவை ஆதரித்து நடந்த கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சிறீலங்கா சுதந்திரக்கட்சி வடபகுதிப் பிரசாரச் செயலாளரும், மானிப்பாய் தொகுதி அமைப்பாளருமான திரு. எஸ். சிவஞானம் (சுசிதர்] தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது ஏராளமானோர் இக்கூட்டத்தில் குழுமியிருந்தனர்.

சுன்னாகம் பகுதி நீலநிறச் கொடிகளாளாலும் கூட்டம் நடைபெற்ற மேடை வெங்காயம், மிளகாய் உட்படமரக்கறி வகைகளாயினும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

திரு. சண்முகலிங்கம் தொடர்ந்து பேசுகையில், ''கொல்வின் ஆர். டி. சில்வா ஒரு கிரிமினல்' சட்டத்தரணியாக இருக்கிறார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் சிறந்த சிவில் சட்டத்தரணிகள் பலர் இருக்கிறார்கள். இந்த நிலையில் திரு. கொப்பேகடுவ வெற்றியீட்டினால், அது சட்ட விரோதமாகக் கணிக்கப்படும் என்று ஒரு 'கிரிமினல்' சட்டத்தரணியான கலாநிதி கொல்வின் எப்படிக் கூறமுடியும்? என்றும் கேட்டார்.

திரு எஸ். சிவஞானம் தமது தலைமையுரையில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் வடபகுதி விவசாயிகள் பெரும் பயன்களைப் பெற்றார்கள் என்றும், பெற்றபலனை கடந்த 5 ஆண்டுகாலமாக விவசாயிகள் இழந்து விட்டார்கள் என்றும் கவலை தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் திரு. கொப்பேகடுவ வெற்றியீட்டியதும், விவசாயிகளின் பிரச்னை மட்டுமல்ல, தமிழ் மக்களின் சகல பிரச்னைகளும் தீர்த்துவைக்கப்படும் என்று திரு. சிவஞானம் உறுதியளித்தார்.

**வன்செயல் நஷ்டஈடு**

திரு. ஹெக்டர் கொப்பேகடுவ உரைநிகழ்த்துகையில், வடபகுதியில் நடைபெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களில் நஷ்டஈடு வழங்கப்படாதவர்களுக்கு நான் பதவிக்கு வந்ததும் உடனடியாக வழங்குவேன் என்றார்.

மூன்று தடவைகள் யாழ் மாவட்டத்தில் வன்செயல்கள் நடைபெற்றிருக்கின்றன. இதற்கு காரணகர்த்தாக்கள் யார் என்பதை விசாரணைகள் மூலம் கண்டுபிடித்து அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பேன் என்றும், பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தியும், விடுதலை செய்ய வேண்டியவர்களை விடுதலை செய்யவும் நடவடிக்கை எடுப்பேன் என்றும் திரு. கொப்பேகடுவ சொன்னார்.

சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் அமைச்சர்களான திரு. கே. பி. இரத்நாயக்கா, திரு ரி. பி. இலங்கரத்ன, யாழ்ப்பாணத் தொகுதி அமைப்பாளர் திரு. திரு. குமாரசாமி வினோதன் உட்பட பலர் உரைநிகழ்த்தினர். [மா]

# உயர் மதிப்பினலேயே

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓதப்பெறுதவர்களுக்கு இவ்வின்பம் கிட்டாது. இதுகையோர் இறந்தபின், அவனது காதுகள் வழிஎதுவும் நுழையாத நிலையில் அவரது வெறும் சடலத்தின்முன்— புனிதமற்ற இடத்தில் தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களைப் படிப்பது யாருக்காக? அவருக்காகவா? அங்கு குழுமியிருப்பவர்களுக்காகவா?

எது எவ்வாறாயினும் அசுத்தமான சூழ்நிலையில் அதாவது சபிண்டீகரணம் வரை குறிக்கோள் எதுவுமின்றி இறந்தவர் நற்கதியை கருத்திற் கொண்டு, இறப்பு நிகழ்ந்த இடத்தில் தெய்கவீத்தேவார திருவாசகங்களை ஓதல் ஆகாது என்பதை மனதில் நன்கு பதித்துக்கொள்ளல் வேண்டும்.

பிரேதம் அசுத்தமானதன்று என்றும், இறப்பு நிகழ்ந்த இடத்தில்புனிதமான நிலையே நிலவுகின்றது என்றும் ஆசூசம் என்று ஒன்று கிடையாது என்றும் எண்ணம் கொண்டவர்களுக்கு என் விளக்கம், என் கருத்து, தேவையற்றது. லிங்காயதர்கள், வீரசைவர்கள் ஆகியோரார் என் கருத்தை பொருட்படுத்தத் தேவையில்லை. அவர்கள் மத அனுஷ்டானங்கள் தனிப்பட்டவை.

சைவவினாவிடை இரண்டாம் புத்தகத்தில் 417, 418 ஆகிய இரு வினாக்களுக்குரிய விடைகள் இச்சந்தர்ப்பத்தில் சந்தேகங்களை மேலும் தெளிய வைக்கின்றன. இவ் விடைகளும் இவ்விடைகளால் பெறப்படும் ஊகித்தற்குரிய கருத்துக்களும் நாவலர் பரம்பரையில் சைவ வாழ்வு வாழும் நம்மவர்கள் ஊன்றி உற்றுநோக்கிக் கடைப்பிடித்தற்குரியன. இவ்வினாக்களை அவதானிப்போம். 417ம் வினா சிவபெருமானை வழிபடுவோர் மரிக்கும் பொழுது யாது செய்தல் வேண்டுமென வினவ, விவரமான விடையின் இறுதி ''வேத சிவாகமங்களையேனும் தேவார திருவாசகங்களையேனும் சிவ பக்தர்கள் ஓதக் கேட்டல் வேண்டும்'' என அமைகின்றது. ஓதக்கேட்பது உயிருள்ள நிலையிலேயே அன்றி, உயிர் நீங்கிய சவ நிலையில் அன்று.

இறக்கும் பொழுது [ஏனையோர்] அவருக்கு யாது செய்தல் வேண்டும் என்ற வினாவுக்கு ''அவர் செவியில் அருமருந்தாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தல் வேண்டும்'' என்று கூறுகின்றது 418ம்விடையின் இறுதிப்பகுதி. இறந்தபின் சவத்தின் முன் தேவார திருவாசகங்களை ஓதும் மரபு அறவேகிடையாததனால்தான் உயிர்பிரியும் நிலையில் மட்டும் இவ்வாறு ஓதுதல் விதிக்கப்பட்டது. பிரியும் நிலையில் ஓதுபவர் ஆற்றாமையால் தொடர்ந்தும் ஓதத் தலைப்பட்டமையே பிரேதம் தகிக்கப்படும்வரை தேவார திருவாசகங்களை ஓதும் வழக்கம் நீண்டுகொண்டே போகின்றது போலும்.

[நாளை முடியும்]




விலை: ரூபா 15/-

எறும்புக்கூடுகளில் அல்லது உங்கள் தோட்டத்தில் சின மூட்டும் எறும்புக்கள் காணப்படும் இடங்களில் பேதயன் ஈ.சீ. 50% தெளியுங்கள் - உங்கள் பூங்காவில் மேலதிக இனிமை காண்பீர்கள்.

ஹேகெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் றோட், கொழும்பு 10.

4774

## ஓர் நற்செய்தி

யாழ். குடாநாட்டில் எப்பகுதியிலாவது

1. வீடுகள்
2. காணிகள் (Buildable Lands)
3. தோட்டங்கள்
4. கட்டிடங்கள் (Buildings)

விற்பனவுக்கிருந்தால் உடனடியாக எம்மிடம் தொடர்புகொள்ளவும்.

விபரங்களுக்கு:

திட்ட அதிகாரி,
தோட்டக் காணிப்பிரிவு,
த பினன்ஸ் கம்பனி லிமிட்.
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம் போன்: 23680

TFC

## "அநீதிகளை உலகிற்கு எடுத்துக் காட்ட

# ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்களை பிரசார மேடையாக்க வேண்டும்"

### குமார் பொன்னம்பலம் கருத்து

(யாழ்ப்பாணம்)

"நாம் விரும்பினாலோ இன்றேல் விரும்பாவிட்டாலோ முற்றுமுழுதாக நம்மை நாமே ஆளும் நிலை ஏற்படும்வரை ஸ்ரீலங்கா ஜனாதிபதியாலும், ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தாலும் ஆளப்படுவோம். நீதிமன்றங்கள் உட்பட ஸ்ரீலங்கா அரசுடனான தொடர்புகளை முற்றுமுழுதாக துண்டிக்கும் ஒருநிலை ஏற்படும்வரை எமக்கு ஸ்ரீலங்கா அரசாலும் பௌத்த சிங்கள பேரினவாதிகளாலும், இழைக்கப்படும், அநீதிகளை எடுத்துரைக்க, உலகிற்கு காட்ட பாராளுமன்றம், பாராளுமன்றதேர்தல், ஜனாதிபதி தேர்தல் ஆகியவற்றை பிரசார மேடையாகப் பயன்படுத்துவது அவசியமாகும்"

தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளரும், ஜனாதிபதி வேட்பாளருமான திரு. குமார் பொன்னம்பலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழ்ஈழம் நிறுவுவதையே பணிப்புரையாக வைத்து தமிழ் தேசிய இன மக்கள் வாக்களித்துவிட்டனர். திரும்பவும் ஏன் அந்த வகையில் வாக்களிக்கவேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். இப்படிக்கூறுவது விந்தையானதாகும் ஒரு இன மக்களின் சுயாட்சிக் கோரிக்கையை அவ் இனமக்கள் பெறும்வரை கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி உரைக்கப் படல்வேண்டும். உலக விடுதலை இயக்கங்கள் காட்டுகின்ற பாதையும் இதுவேதான். இது ஒருபுறமிருக்க அவ்வாறு தமிழ் ஈழ அரசை நிறுவுமாறு பணிப்புரை பெற்றவர்கள் ஒற்றிற்கொன்று முரண்பாடான இரு சத்தியவாக்கை கொடுத்திருக்கின்றனர் அமரர் செல்வநாயகம் அவர்களின் சமாதியில் தமிழ்ஈழம் நிறுவப்போவதாக பிரதிக்ஞை செய்தனர். மறுபுறம் சிங்கள அரசமைப்பைப் போற்றிப்பாராட்டி, அமைந்து பணிந்து நடப்பதாக நாடாளுமன்றத்தில் வேறொரு சத்தியம் செய்திருக்கின்றனர். சத்திய வாக்குகள் ஒருபுறமிருக்க தமிழ்ஈழம் நிறுவும் நோக்கத்தைக்கொண்ட ஒருசெயலிலும் அவர்கள் ஈடுபடவில்லை. ஒரு நீதிமன்றத்தில் ஒருவர் ஒரு வழக்கைத் தாக்கல்செய்தபின்னர் தொடர்ந்து நடவடிக்கை எடுக்காவிடின் நீதிமன்றம் அவ்வழக்கு அற்றுப்போனதாக தீர்ப்பு எழுதிவிடும். இதுஅன்றாட வாழ்வில் ஒரு சம்பவம்.

"1977-ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் தேசிய இன மக்கள் விடுத்த பணிப்புரையை பெற்றவர்கள் தொடர்ந்து செயலாற்றாமையாலும் பணிப்புரைக்கு மாறாக சிங்கள ஆதிபத்தியத்திடம் அபிவிருத்திச் சபைகள் அல்லது மாவட்ட சபைகள் என்ற இறைமை சற்றுமில்லாத ஒருமிகக் குறைந்த அர்தஸ்துடைய மாற்றுக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர். தமிழ்ஈழ இலட்சியத்தை ஒதுக்கிவிட்டுஅதற்கு எவ்வளவோ குறைந்த அந்தஸ்துடைய அபிவிருத்தி சபைகளை ஏற்றுக்கொண்டால் இதற்கும் கூடிய தமிழினத்தின் இதய தாகமாகிய தமிழ் ஈழக்கோரிக்கையை மாசுபடுத்துவதாக அமையாதா? இவ்வாறான காரணங்களை வைத்துத்தான் சிங்கள ஆட்சியினரும் தமிழினம் தமிழ் ஈழக் கோரிக்கையை கைவிட்டுவிட்டதாகப் பிரசாரம் செய்கின்றனர்.

ஒரு தேர்தலில் மக்கள் வாக்களிக்காது விட்டு ஒரு இலட்சியத்தை நிலைநாட்டினோம் என்று கூறமுடியாது. ஒரு தேர்தலில் குறிப்பிட்ட ஒருவனுக்கு வாக்களித்து வாக்காளப் பொமக்கள் இலட்சியமொன்றை நிலைநாட்டலாம். தேர்தல்முடிவுகளுக்கு எத்தனை பேர் வாக்களிக்க வந்தார்கள் என்பதில் இருந்துதான் கணக்கெடுக்கப்படும் இத்தனைபேர் வரவில்லையென உலகத்தில் எங்கும் கணக்கெடுப்பதில்லை என்டதையும் தெரியப்படுத்த விரும்புகிறேன். அத்தோடு நூற்றுக்கு நூறு பகிஸ்கரிப்பு வெற்றிபெறமாட்டாது என்பதையும் சுட்டிக்காட்டுவதோடு கடந்த ஆண்டுநடைபெற்ற யாழ்ப்பாண அபிவிருத்திச் சபைத்தேர்தலில் நடைபெற்ற தில்லுமுல்லுகள் ஆட்சியாளரினால் நடைபெறமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது. எனவே நீங்கள் போகாது விட்டால் இவ்வாக்குகள் வேறொருவிதத்தில் இன்னொரு இனத்தவருக்கு போடப்பட்டால் இதன் விளைவு என்னவாக இருக்கும் என்பது பகுத்தறிவு படைத்த ஒவ்வொருவருக்கும் தெரியாதது அல்ல.

"இந்த நாட்டை விட்டு ஆங்கிலேயர் வெளியேறிய போது ஆட்சி அதிகாரத்தை பெரும்பான்மையோரின் கரங்களிலே ஒப்படைத்துவிட்டுச் சென்றுவிட்டனர் அதன் விளைவு எம்மவரில் ஒரு பகுதியினர் குடியுரிமை இழந்தனர். எமது பாரம்பரியத் தாயகம் குடியேற்றம் என்ற போர்வையில் சுபளீகரம் செய்யப்பட்டது. மொழியுரிமை பறிக்கப்பட்டு அரசியல் அந்தஸ்து குறைக்கப்பட்டு ஆளப்படுவோரானோம். எம்மவரின் உயிர்கள், உடைமைகள் பறிக்கப்பட்டன. உயிரிலும் மேலான தமிழ் பெண்களின் கற்பு இனக்கலவரங்களினால் சூறையாடப்பட்டது கப்பலோட்டிய தமிழன் கப்பலில் ஏற்றப்பட்டான். இத்தனையும் நடந்தது 1960க்கு முன்பு சிங்களப் பகுதிகளில் ஆனால், 1960 க்குப் பின்பு எமது மண்ணிலே சிங்கள ஆட்சியாளர்களான ஐ. தே. க. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதன் பங்காளிகளான லங்கா சமசமாஜக்கட்சி கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் காவல் படைகள் முகாமிட்டிருந்து முன்சொன்ன அனைத்தையும்புரிந்தன இத்தனையும் போதாதென்று தமிழ்ப் பேசும் சமுதாயத்தை நிரந்தர இருளில் வைப்பதற்கு தமிழ்பேசும் இனத்தை நிரந்தர அடிமைகளாக ஆக்குவதற்கு தரப்படுத்தலை அறிமுகப்படுத்தினார்கள். வெகுண்டெழுந்த தமிழ் சமுதாயத்திற்கு பெரும்பான்மையோர் தந்தபரிசு அடி, உதை, கொலை, கொள்ளை, கற்பழிப்பு, எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தால் போல 1972ல் தமிழ் பேசும் மக்களை அடிமைகள் ஆக்கும் அரசியற் சாசனத்தை ஆக்கினார்கள். இத்தனை இன்னல்களுக்குப் பின்பும் சிங்கள வேட்பாளர்கட்கு வடக்கு கிழக்கில் வாக்குகள் பெருகினால் தமிழ் இனம் தமிழ் ஈழக்கோரிக்கையை கைவிட்டுவிட்டதுஎன்ற முடிவு ஏற்படும் எனவே தமிழ்த் தேசிய இனம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பூரண இறைமை கொண்ட சமதர்ம தமிழ் ஈழம் ஒன்றே எமது இலட்சியம் என்பதைஉலகுக்கு காட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தாயகமாகவும் தளமாகவும் கருதும் இலங்கை பூராவும் வாழுகின்ற தமிழ் தேசிய இன மக்கள் தமிழ் தேசிய இனத்தின் சார்பில் போட்டியிடும் என்னை ஆதரித்து வாக்களித்து தமிழினத்தின் தேசிய தாகத்தை உலகுக்கு காட்டும்படி மிகப் பணிவன்புடன் வேண்டுகின்றேன்."

## "தமிழ் ஈழஎல்லைக்கு வெளியில்

# புத்தளத்தில் போட்டியிட்ட கூட்டணி ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதேன்?'

### கிளிநொச்சியில் குமார் பொன்னம்பலம்

(கிளிநொச்சி)

'1977-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழீழ எல்லைக்கு அப்பாலுள்ள புத்தளம் தொகுதியில் போட்டியிட்ட தமிழர் கூட்டணியினர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் பின்வாங்கியது ஏன்?' என்று கிளிநொச்சியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கேள்வி எழுப்பினர் ஜனாதிபதி வேட்பாளர் திரு குமார் பொன்னம்பலம்.

திரு. வே. இராஜேந்திரம் தலைமையில் ஜெட்ரிக்கோ அரங்கில் நடைபெற்ற பிரஸ்தாப கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் மேலும் பேசுகையில்:-

'கடந்த தேர்தலில் கூட்டணியினர் வட கிழக்கு மாகாணத்திற்கு அப்பாலுள்ள தொகுதிகளில் போட்டியிட்ட திரு. தொண்டமானுக்கும், திரு. செல்லச்சாமிக்கும் தமது ஆதரவை வழங்கி தேர்தல் பிரசாரத்திலும் ஈடுபட்டனர் இன்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் பின்வாங்கித் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குத் துரோகம் இழைத்துவிட்டனர்.

'வாக்குரிமைதான் தமிழ் மக்களின் கூரிய ஆயுதம் என்று கூறிவந்து மலையமக்கள் வாக்குரிமை பெறப்பாடுபடுபவர்கள் தாமே என்று கூறும் தமிழ்த் தலைவர்கள் வாக்குரிமையை துஷ்பிரயோகம்செய்ய முன்வந்தது ஏன்?

'தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ள வாக்களிக்கும் கூரிய ஆயுதத்தை நல்லமுறையில் பயன்படுத்தவேண்டும் எதிர் காலத்தில் வேறும் ஆயுதம் கிடைக்கலாம் ஆனால் இன்றைய ஆயுதத்தை நாம் பயன்படுத்தியே ஆகவேண்டும்

'குட்டிமணியை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடச் செய்வதுபற்றிப் பரிசீலனை செய்யமுன்வந்த தமிழர் கூட்டணியினர் ஜனாதிப தேர்தலில் கொள்கையளவில் பங்கேற்க உத்தேசித்ததையே எடுத்துக்காட்டுகிறது. நெஞ்சிலே துணிவின்றி, நேர்மைத் திறனுமின்றி பகிஷ்கரிப்பு என்ற ஒரு போலிக் கோஷத்தை முன்வைத்துத் தேர்தலில் நின்றும் ஒதுங்கிவிட்டனர் தேர்தல் பகிஷ்கரிப்புக்கள் வெற்றியடைந்த வரலாறு இல்லை

'நான் இந்த தேர்தலில் சிங்கள மக்களிடம் வாக்குக் கேட்கின்றேனா? என் உடன்புக்களான 20 லட்சம் தமிழ் வாக்காளரிடம்தானே வாக்குக் கேட்கிறேன்.

'இத்தேர்தலில் தமிழ் மகனான நான் போட்டியிடாது விட்டால் தமிழரின் சகல வாக்குகளும் தவறான வழிகளில் ஜே ஆ. ருக்கே போய்ச் சேரும். போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று கூறிய வகுப்பு வாத ஜெயவர்த்தனவிற்குத் தமிழ் மக்கள் ஒரு பாடம் புகட்டியேதீரவேண்டும் தமிழ் மக்களிடம் சென்று வாக்குக் கேட்க இந்த ஜே ஆ. ருக்கு என்ன யோக்கியதை இருக்கிறது' என்றார்.

சட்டத்தரணி ச. விக்னேஸ்வரன், ஆசிரியர் சச்சி, முருகேசு, திரு. அருமைநாயகம், சட்டத்தரணி மோதிலால் நேரு உட்படப் பலர் உரை

## லயன்ஸ் ஆதரவில்

### நகைச்சுவை கதம்பநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

வரணியூரான் - கிறேஸி கோமாளிகள், முதல்தடவையாக இணைந்துவழங்கும் நகைச்சுவைக் கதம்ப நிகழ்ச்சியொன்று எதிர்வரும் சனிக்கிழமை 16ந் திகதி மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சியை யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினர் சேவை நிதிக்காக ஒழுங்குசெய்துள்ளார். (கி)

## பொன்னாடை கௌரவம்



சமாதான நீதவானாக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்ட முல்லைக்கவி பா. அமிர்தநாயகத்தின் சேவையைப்பாராட்டி அச்சுவேலி கதிரொலி சனசமூக நிலையம் பொன்னாடை போர்த்தி வாழ்த்துமடல் வழங்கிக் கௌரவித்தது.

நிலைய முன்றலில் நடந்த 34-வது ஆண்டு நிறைவுவிழாவிலேயே நிலையத் தலைவர் கண. சந்திரபோஸ் முல்லைக் கவிக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். ஆசிரியர் வேதாரணியம் வாழ்த்துமடலை இசையுடன் பாடி வழங்கினார். நிலையத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரும், கால் நூற்றாண்டுக்கு மேலாகக் கலையுலகில் இலக்கிய சேவையாற்றிவருபவருமான, சமாதான நீதிவான் கவிஞர் முல்லைக்கவியின் சேவையைப் பாராட்டிப் பலர் உரையாற்றினர். விழா ஆரம்பத்தில் கதிரொளி சனசமூக நிலையத் தலைவரான அமரர் வைத்தியர் கதிரவேலு உருவப்படத்தினைக் கவிஞர் முல்லைக்கவி திரைநீக்கம்செய்து வைத்தார். கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.


OPTIMATIC PICTURE CONTROL

என்ற அதிவிசேஷ அம்சத்தின் மூலம் காட்சிகளின் தனித்தன்மையைக் கண்டுகளிக்க இன்றே யப்பான் (JAPAN) நாட்டு உற்பத்தியான



சாப் கலர் டெலிவிஷன்களை

SHARP Colour TELEVISIONS

வாங்குங்கள்

கிடைக்குமிடம்:

ஈஸ்வர் கோப்பறேசன்

18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே. எண் : 23308

# சைக்கிளுக்கு ஆசைப்பட்ட இளைஞர் தற்கொலை!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மறவன்புலோவைச் சேர்ந்த 17 வயதான நா. கனகேஸ்வரன் என்பவர் நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

சாவகச்சேரி திடீர்மரண விசாரணை அதிகாரி என் தர்மேந்திரன் விசாரணையை மேற்கொண்டார்.

சாட்சியங்களிலிருந்து இறந்தவர் புதுச்சைக்கிள் ஒன்று வாங்கித் தரும்படி தந்தையைக் கேட்டதாகவும் தந்தை தற்போது பணவசதியில்லை, தோட்டப்பிரயோசனங்கள் விற்று ஓர் சைக்கிள் வாங்கித் தருவதாகக் கூறிக் காலமானவரைத் தோட்டத்தைக் கவனிக்கும்படி கூறிவிட்டு சோவிலுக்குச் சென்றதாகவும் இதை ஏற்றுக்கொள்ளாத மகன் நச்சுத்திராவகம் அருந்தியதாகவும் தெரியவந்தது.

சாட்சியங்களைப்பதிவுசெய்த மரண விசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் தற்கொலை என்று தீர்ப்பளித்தார். (க)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்–காஞ்சனா
காதலிக்க நேரமில்லை
(புதிய பிரதி)

மனோகரா [யாழ் நகர்]
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜாவின்
புதிய வார்ப்புகள்
(கலர்)

சில தினங்கள் மட்டும்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6–15, 9–15,
சனி, ஞாயிறு 2–30
கமலஹாசன்
ராஜபார்வை

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
1. தங்கம்மா-என்ன போடியார் அம்மான் எல்லாரும் வீட்டோட ஓடுறீங்க.
2. போடியார்- இல்லை பிள்ளை, வந்தாலும் வந்தது ஒரு படம் மௌன கீதங்கள் வீட்டிலை இருக்க விடுகின்றுகளில்லை.
பாக்கியராஜ்-சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: பாக்கியராஜ்

## தலைவராகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கோவில்பற்று ப.நோ. கூ. சங்கத்திற்கு திரு. சுவாமிநாதன் தர்மசீலன் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் உடுவில் கமநல சேவைநிலைய இயக்குநர் சபை உறுப்பினரும், சண்டிலிப்பாய் ப. நோ. கூ. சங்கக்கிளைக்குழுத்தலைவரும், மானிப்பாய் கோவில்பற்று முன்னேற்றச் சங்க நிர்வாக சபை அங்கத்தவரும், சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகசபை அங்கத்தவரும், கல்வளை விநாயகர் ஆலய செயலாளருமாவார். இவர் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மான்மியபுத்தகத்தின் ஆசிரியருமாவார்.

றீகல் 4-வது ஹவுஸ்புல் வாரம். 10-30,
[யாழ்.நகர்] 2-30, 6-15
9-30
ரஜனிகாந்த்-ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)

இரு தினங்கள் மட்டும்
சாந்தி [யாழ்.நகர்]
Daily 5 shows
DOM DE LUISE
in
HOT STUFF
Action-Comedy-Color

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ரயில் பயணங்களில்

லிடோ தினசரி 5 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
VAMPIRE CIRCUS

ராணி தினசரி 5 காட்சிகள்
(யாழ் நகர்)
EYE WITNESS

வின்ஸர் குறிப்பிட்ட சிலதினங்கள் மட்டும்
(யாழ். நகர்) 2-வது மாதமாக
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்--சுபாஷினி
பாலைவனச் சோலை

கடைசி 3 தினங்கள்
ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை
16-10-82 — 24-10-82
A BRIDGE TOO FAR (War Film)

## "உங்கள் வாக்குகளால்

# என்னை தூக்கி வீசினாலும் நான் உங்களைவிட்டுப் போகமாட்டேன்"

### மன்னாரில் ஜனாதிபதி ஜே. ஆர்.

[மன்னார்]

உங்கள் வாக்குகளால்என்னை தூக்கி வீசலாம், நீங்கள் என்னை தூக்கி வீசினாலும், நான் உங்களை விட்டுபோகமாட்டேன்''

மன்னார் பொது நூலக முன்றலில், ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி வேட்பாளர், ஜனாதிபதி ஜே. ஆர், ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது; எமது நாட்டைச் சேர்ந்த 80 லட்சம் வாக்காளர்களும் சேர்ந்தே ஜனாதிபதியைத் தெரிவு செய்யவேண்டும் என்னை மக்கள் விரும்பாதுவிட்டால் ஜனாதிபதியாக தெரிவு செய்யாமல் விடலாம், ஆனால் என்னைத்தான் மக்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்வார்கள்என்பது எனக்குத்தெரியும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும், சமசமாஜக் கட்சியினரும் ஜனாதிபதித் தேர்தலைத் தடுக்கப்பார்க்கிறார்கள். இதன் மூலம் அவர்கள் மக்களின் குடியுரிமையைப் பறிக்கப்பார்க்கின்றனர்.

ஒரு பெண்ணின் குடியுரிமை நீக்கப்பட்டதற்காக கூக்குரலிடுகின்றனர். அப்படி கூக்குரலிடுபவர்கள் ஜனாதிபதி தேர்தலை தடுத்து 80 லட்சம் மக்களின் குடியுரிமையைப் பறிக்க முயல்வது சரியானதா?

இத்தேர்தல்மூலம் மக்களால் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதி மக்களுக்காகவே உழைப்பார்,

நீங்கள் தெரிவுசெய்தஜனாதிபதி சரியில்லையானால் அவரை மக்களே பதவியைவிட்டு இறக்கலாம். 6 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். சில சமயம் இம்முறை நடப்பதுபோல் முன் கூட்டியும் ஜனாதிபதி தேர்தல் நடைபெறலாம்.

75ம் ஆண்டு பொதுத்தேர்தல் பின்போடப்பட்டதுபோல் ஜனாதிபதி தேர்தல் பின்போடப்படமாட்டாது.

75ஆம் ஆண்டு பொதுத்தேர்தல், கிராமாட்சிமன்ற தேர்தல், நகராட்சிமன்ற தேர்தல், மாநகராட்சி மன்றதேர்தல் யாவும் பின்போடப்பட்டன.

ஜனாதிபதியையும், எம். பிக்களையும் தெரிவு செய்யும் உரிமையை நாம் மக்களிடமே விட்டுள்ளோம்.

உங்கள் வாக்குகளால் என்னைத் தூக்கி வீசினாலும், வீசலாம் நீங்கள் என்னை தூக்கி வீசினாலும் உங்களை விட்டுப் போகமாட்டேன்.

6 வருட அவசரகாலச் சட்ட ஆட்சியில் எத்தனைபேர் கைது செய்யப்பட்டனர். எத்தனை பேர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர்.

அப்போதெல்லாம் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன 70ம் ஆண்டு முதல் 77ஆம் ஆண்டுவரை இலங்கையில் ஊழல் ஆட்சியே நடைபெற்றது. (க)

## மிளகாய், வெங்காயச் செய்கை

# புலோலி விவசாயக் கழகங்களுக்கு முதல்பரிசு

(புலோலி)

யாழ். மாவட்ட இளம் விவசாயக் கழக விழாவிலும் பொருட்காட்சியிலும் மிளகாய்ச் செய்கை, வெங்காயச் செய்கை ஆகிய இரண்டிலும் புலோலி விவசாயப் போதனாசிரியர் பிரிவைச் சேர்ந்த இரு இளம் விவசாயக் கழகங்கள் முதல் பரிசைத் தட்டிக் கொண்டன.

யாழ். மாவட்ட இளம் விவசாயக்கழக விழாவும் பொருட்காட்சியும் யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். ஜெயரத்தினம் தலைமையில் யாழ் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலயத்தில் நடைபெற்றது.

விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி ஜி. டபிள்யூ. ஈ. பெர்னாண்டோ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

புலோலி விவசாயப் போதனாசிரியர் பிரிவைச் சேர்ந்த புலோலி தெற்கு இளம் விவசாயக்கழகம் மிளகாய்ச் செய்கையில் முதலாம் இடத்தையும், கரவெட்டி மேற்கு இளம் விவசாயக்கழகம் வெங்காயச் செய்கையில் முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன,

இவற்றிற்கான பரிசில்களை விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். ஆர். அரிராசசிங்கத்தின் பாரியாரிடமிருந்து புலோலி தெற்கு இளம் விவசாயக் கழகத்தைச் சேர்ந்த திரு. எஸ் பரமானந்தமும் கரவெட்டி மேற்கு இளம் விவசாயக் கழகத்தைச் சேர்ந்த திரு. மா. சிவபாலனும் பெற்றுக்கொண்டனர்.

மிளகாய், வெங்காயம் ஆகிய இரு பயிர்ச்செய்கைகளிலும் முதலாம் பரிசைத் தட்டிக்கொண்ட இவ்விரு இளம் விவசாயக்கழகங்களையும் புலோலி விவசாயப் போதனாசிரியர் திரு. கிருஷ்ணபிள்ளை பாராட்டியுள்ளார். (க)

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 27ம் திகதி
புதன்கிழமை
(13—10—82)

மேடம்: கைகொடுத்து உதவுவதற்கு தந்தை முன்வருவார். காரியசித்தியும் கிட்டும். நீண்டநாள் எதிரிகள் இன்று மீண்டும் நண்பர்களாவர். திருப்திகரமான தினம்.

இடபம்: இதயத்தில் ஏக்கம் இன்று தணியும். தேடிய பொருள் இன்று காலடியில் சரணடையும். பரோபகார சிந்தை மேலிடும், நண்பர் ஒருவர்க்கு கைகொடுத்து உதவுவீர்கள்.

மிதுனம்: மெத்தவும் பொருள் சேரும். மேலிடத்து வாழ்த்தும் தப்பாமல் கிட்டும். தித்திக்கும் செய்தியுடன் தேனான வாழ்வும் உண்டாம்.

கடகம்: திகில் மூட்டம் ஏற்படும், சிலர் வீண் பழிக்கும் இலக்காவார்கள், விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவை எடுக்கும். பயிர்ச் செய்கைகளில் பாதிப்பு ஏற்படலாம்.

சிங்கம்: இனப்பூசலின்மூலம் இதயப் பாரம்ஏற்படும், திடீர் முடிவுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப்படுவீர்கள். எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றின் நிலைமையை சமாளிக்க முடியும்.

கன்னி: தனத்துடன் வாழ்வும் இன்று தவறாது பெருகும். நீண்ட நாள் கடன் இன்று நிவர்த்தியாகும். வியப்பூட்டும் செய்தியும் கிடைக்கும்.

துலாம்: சுறுசுறுப்புக்குன்றும். உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள். கோணலுடன் கோபமும் அதிகரிக்கும். அமைதியே நன்று.

விருச்சிகம்: தன்மான மிகுதிக்கும் தனவரவிற்கும் இடமுண்டு. சிலருக்கு வாகனச் சுகமும் கிடைக்கலாம். குடும்பத்தில் தென்றல் வீசும் உறவினர் படை எடுத்து வருவார்கள்.

தனு: அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும். விருந்தினர்கள் வருகை உங்கட்கு மகிழ்ச்சியைத் தரலாம். எதிர்பாராத பணமும் கைக்குக் கிடைக்கலாம்

மகரம்: பகைமூட்டம்தோன்றும். பதட்டம் உடன்சேரும். மிகையான போக்கினால் மனதும் பாழாகிப் போய்விடும்.

கும்பம்: இரக்கசிந்தை மேலிடும். மற்றவர்கட்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவீர்கள். வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

மீனம்: எதிர்பாராத பணமுடை ஏற்படும். கடன்தொல்லைகளால் கஷ்டப்படுவீர்கள். தொழில் துறையில் தொல்லைகள் தோன்றி மறையும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## சந்தேக

[6ம் பக்கத் தொடர்ச்சி]

பிள்ளை நடராசா என்பவர் அடையாளம் காட்டியதைத் தொடர்ந்து கைவிரலடையாளம் எடுக்கப்பட்டு இந்த மாதம் 20ம்திகதிவரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## சிங்கள

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கேலிசெய்யக் கூடியவகையில் படம் ஒட்டப்பட்டிருந்தது. நான்உடனே அதைப்பொலிஸ் இன்ஸ்பெக்டரின் கவனத்திற்குக் கொண்டுவந்து இதனால் தமிழ்–சிங்கள இனப் பிரச்சினை ஏற்படக் கூடியாதக இருப்பதாகக்கூறி அதை அகற்றுவிக்குமாறு கேட்டேன். அவர் அப்படியே செய்தார். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் எஸ். டபிள்யூ, ஆர். டி. பண்டாரநாயக்காவுக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் மீண்டும் அப்படத்தை இருந்த இடத்திலே வைக்குமாறு இன்ஸ்பெக்டருக்கு உத்தரவிட்டிருந்தார்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பிழையான கொள்கைகளினாலேயே மக்கள் இன்று இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். 10 ரூபா சம்பள உயர்வுகோரிய ஊழியர்களுக்கு பொல்லடி விழுந்தது மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலின் போது யாழ். பொது நூலகம் தீக்கிரையாயானது யாழ் நூலக புனருத்தாரன நடவடிக்கைகளின் போது முதன் முதலாக லங்கா சமசமாஜக்கட்சி 7.000 நூல்களை வழங்கியது. டாக்டர் கொல்வினையே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யுங்கள்''

கருவாடு திருட்டு வழக்கு:

## சந்தேகநபர்கள் பிணையில் செல்ல அனுமதி

(சாவகச்சேரி)

4000 ரூபா பெறுமதியான கருவாடு திருடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட இருவர் தலா 2500 ரூபா பிணையிற் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

இவ்வழக்கு பளை சுற்று நீதிமன்றத்தில் பதில் நீதிபதி எஸ். கந்தசாமி முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது.

82 ஜூலை 14ல் செம்பியன் பற்று மாமுனையைச் சேர்ந்த வடிவேலு அருமைநாயகம் என்பவரது பாதுகாப்பிலிருந்து மருதங்கேணியைச் சேர்ந்த, மயில்வாகனம் வேதாரணியம், செல்வம் என்பவர்கள் 4000 ரூபா பெறுமதியான கருவாட்டைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி செ அம்பிகைபாலன் எதிரிகளைப் பிணையில் விடும்படி கோரியதை அடுத்து நீதிபதி எதிரிகளைத் தலா 2500 ரூபா பிணையில்செல்ல அனுமதித்தார். (க)

இன்று

## வவுனிக்குளம் அம்பாள் ஊர்வலம்

(வவுனிக்குளம்)

வவுனிக்குளம் சிவாலயத்திற்கெனப் புதிதாக உருவாக்கப்பட்ட ராஜராஜேஸ்வரி உற்சவமூர்த்தி விக்கிரகம் இன்று புதன்கிழமை காலை ஊர்வலமாக எடுத்துச்செல்லப் படுகிறது.

யாழ். நீராவியடியிலிருந்து ஆரம்பமாகும் இவ்வூர்வலம் கண்டி வீதி வழியாக நாவற்குழி, கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், பளை, பரந்தன், கிளிநொச்சி, முறிகண்டி, மாங்குளம் ஊடாகச்சென்று 17-ம் திகதி ஞாயிறு கோவிலைச் சென்றடையும்.

## இப்படியும் நடக்கிறது

பன்னிரண்டு வயதுள்ள 'செல்வி' திடீரென காலமானதும் அந்த வீட்டில் பெரும் சோகம் குடிகொண்டு விட்டது.

விபரம் அறிந்த அயல்வீட்டுக்காரர்கள் ஓடோடிச் சென்று துக்கம் விசாரித்ததுடன், செல்வி'யின வீட்டுக்காரர்களின் ஒப்பாரியைக்கண்டு கண்ணீர் விட்டனர்!

நேற்றுமுன்தினம் முப்பத்தோராவது நாள்.

அயல்வீட்டுக்காரர்களும், தூரத்து நண்பர்களும் அழைக்கப்பட்டு 'கிருத்தியங்கள்' நடத்தப்பட்டு மதிய போசனமும் வழங்கப்பட்டது.

கதை 'சப்'பென்று இருப்பதாகக்கணித்துவிடாதீர்கள்.

தயவுசெய்து'செல்வி'யை ஒரு நாயின்பெயராகக்கொள்ளவும்! அதுமட்டுமல்ல; அந்த நாய், வீட்டுவளவில் அடக்கம்செய்யப்பட்டு. மலர் வளையங்களும் சாத்தப்பட்டன. சமாதி கட்டப்போவதாகவும் கதை. இச்சம்பவம் நடந்த இடம்: யாழ். நகர், கந்தர்மடம் பகுதி!

'ஊடுருவி'

## அன்னையிடம்....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது. நம்பிக்கைக்குரியவர்கள் என்னிடம் கூறுகிறபடி தெய்வநம்பிக்கையற்றவர்களையும் உணர்வுபெறச் செய்துள்ளது இதர மதத்தினரும் அவ்வாறே,.

இப்பத்திரிகையாளர் கூறியபடி சூரியனில் அதிசயம்நடந்து கொண்டிருந்த அதேவேளை அம்மூன்று சிறுர்களுக்கும் மட்டும் அன்னை மூன்று காட்சிகளைக் காட்டினார். முதலில் அன்னைவெண்ணிற ஆடையில் நீலமுக்காடிட்டு செபமாலையை ஒருகையிலும் யேசுபாலனை ஒரு கையிலும் தாங்கி சூசைமாதாவுடன் திருக்குடும்பமாய் காட்சிஅளித்தாள் அடுத்து யேசு வளர்ந்த மனித தோற்றத்துடன் அன்போடு உலகை ஆசீர்வதிக்க அருகேஅன்னை வியாகுலமாதாவாகக் காட்சி அளித்தாள் இறுதியாகஅன்னை கார்மேல் மாதாவாகத் தோன்றி கையில் உத்தரியத்துடன் காட்சிஅளித்தாள்.

எனவே அன்னை காட்சி கொடுத்த 65வது தினமான இன்றும் நாம் அன்னையிடம் சமாதானத்தை அமைதியை உலகிற்களிக்கும்படி வேண்டி செபமாலை ஓதிடுவோம்.

## யாத்திரை வரி அறவிட நடவடிக்கை

சென்னை, அக் 12

வரலாற்றுப்புகழ்மிக்க சிதம்பரம், பழநி, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், திருக்கழுக்குன்றம் ஆகிய ஆலயங்களுக்கு வரும் யாத்திரிகர்களிடம் யாத்திரை வரி அறவிட தமிழக அரசு ஆலோசித்து வருகிறது.

எதிர்வரும் தமிழக சட்டமன்ற அமர்வில் இதற்கான மசோதா தாக்கல் செய்யப்படும் என்று தமிழ்நாடு மாநில அரசின் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு நேற்றுத் தெரிவித்தார்.

## கீரிமலை ஆலயத்தில் சனிவிரத விசேட நிகழ்ச்சிகள்

(பண்டத்தரிப்பு)

புரட்டாதி மாதக் கடைசிச் சனிக்கிழமை விரதத்தை முன்னிட்டு கீரிமலை அருள்மிகு நகுலேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை விசேட நிகழ்ச்சிகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சனிக்கிழமை விரதம்அனுஷ்டிக்கும் பெருந்தொகையினரான பக்தர்களின் நலன்கருதி சனீஸ்வரனுக்கு எள்எண்ணை எரித்து விசேட வழிபாடுகள் செய்வதற்கும் இவ்வாலயத்தின் ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

## ஜப்பான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குப். லிபரல் கட்சித்தலைமைப் பதவியைராஜினுமா செய்த தன் மூலம் பிரதமர் பதவியை திரு. சுசுக்கி இழந்துள்ளார்.

திரு. சுசுக்கியின் ராஜினுமாவுக்குக் காரணம், ஜப்பான், தேசியரீதியில் பல பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளதாகவும், அவற்றைத் தீர்க்க தீவிரமான ஒரு பிரதமரே வேண்டுமென்ற கருத்துஆளும் கட்சியில் உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

1980 ஜூலையில் ஜப்பானின் பிரதமர் பதவியை ஏற்ற திரு சுசுக்கி ஜப்பானின் 70 வது பிரதமராவர். (உ)

ஜனுதிபதி தேர்தல் நெருங்கிவிட்டது!

தேர்தல் முடிவுகளை நேரில் பார்த்து மகிழ்ந்திட சிறந்த ரக ரெலிவிஷன் ஒன்று! உங்கள் வீட்டில் இருக்கவேண்டாமா!

20-ம் திகதி வரை

நெஷனல்

ரெலிவிஷன்களை விலையில் விசேட கழிவுடன் வழங்குகின்றோம்

V. K. இராசரத்தினம்

95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## தடுப்புக்காவல்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புள்ள ராயகம்; ''டேவிற்சன் இந்தநாட்டின் பேச்சு,எழுத்து சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமை பெற்றவர். அவர் கைதானது பற்றியும் காரணம் சொல்லாமல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது குறித்தும் உலகிலுள்ளமனித உரிமை இயக்கங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. டேவிற்சன் உடனடியாக விசாரணை செய்யப்படவேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டும், டேவிற்சனின் நோக்கத்தின்படி, தேர்தல் பகிஷ்கரிப்புக்கு பிரசாரம்செய்ய அவர் ஜனுதிபதிதேர்தலுக்கு முன்னதாகவே விடுவிக்கப்படவேண்டும். என்று வாதிட்டார்

இக்கட்டத்தில் மேன்முறையீட்டு நீதியரசர் திரு. ஆனந்த ஜி. டி. சில்வா ''தடுப்புக்காவலில் வைக்கபாதுகாப்பு அமைச்சர் உத்தரவிபிறப்பித்திருந்த போதிலும்அதற்குப்சிலகாரணங்கள் இருக்கவேண்டும் என்ன காரணங்களின்கீழ் டேவிற்சன் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்பதை சத்தியக்கடதாசி மூலம் தெரிவிக்கவேண்டும்'' என்று பணித்தார்.

இம்மாதம் பதினைந்தாம் திகதிவரை இவ்விசாரணை ஒத்திவைக்கப்படுவதாகத் தெரிவித்த நீதியரசர்கள். இம்மாதம் 15-ம் திகதி சத்தியக்கடதாசி மூலம் அமைச்சரின் காரணங்கள் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்என்றும். அடுத்த தவணையில் குற்றச்சாட்டுக்கள் பற்றி தெரிவிக்கவேண்டும் என்றும் விசாரணை பதினெட்டாம் திகதி நடைபெறும் என்றும் பணித்தார்கள்.

## கட்சி மாறல்: சட்டரீதியாக தடை

புதுடில்லி, அக். 12

பாரதத்தில் கட்சிமாறல் சட்டரீதியாகத் தடைசெய்யப் படவுள்ளது.

அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் கட்சி விட்டுக் கட்சி மாறுவதன் மூலம் தமது ராஜ்யசபா, லோச்சபா,மாநில சட்டமன்ற உறுப்பினர் பதவிகளை இழக்கச்செய்வதற்கான தேர்தல்சட்டத்திருத்தம் பற்றிய சிபார்சு, பாரததேர்தல் கமிஷனுல் சிபார்சுசெய்யப்பட்டுள்ளதாக பாரதமத்திய அரசின் சட்டத்துறை அமைச்சர் நேற்று ராஜ்ய சபையில் தெரிவித்தார். (உ)

## தீவுப்பகுதியில் ஐ. தே. க. கருத்தரங்குகள்

(மண்டைதீவு)

எதிர்வரும் ஜனுதிபதி தேர்தலை யொட்டி தீவு பகுதிகளில் ஐக்கியதேசியக்கட்சி வேட்பாளரான திரு. ஜெயவர்த்தனுவுக்கு ஆதரவுதேடும் நோக்கமாக ஒவ்வொரு இடங்களிலும் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

நேற்று வேலணை மேற்கிலும் கிழக்கிலும் கருத்தரங்குகள் இடம் பெற்றன. மண்டைதீவில் இன்று காலையிலும் பிற்பகல் அல்லைப்பிட்டியிலும் மாலை மண்கும்பானிலும் நடைபெறும். நாளை அனலைதீவிலும் மாலை எழுவைதீவிலும் நாளை மறுதினம் நயினுதீவிலும் அடுத்தநாள் நெடுந்தீவிலும் கருத்தரங்குகள் நடைபெறவிருக்கின்றன இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள்.

## தமிழ்மக்களுக்கு.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''சுயநிர்ணய உரிமையை முதல்முதல் முன்வைத்தது நவலங்கா சமசமாஜக்கட்சி. ஆதலால் தமிழ்மக்கள் தங்கள் வாக்குகளை வாசுதேவாவுக்குப் போடவேண்டும் என்றுதமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் திரு. அமிர்தலிங்கமும் திரு சிவசிதம்பரமும் ஆணையிடக்கூடாதா'' என்று அவர் கேட்டார்.

## ஆசிபெற்றுர்

(யாழ்ப்பாணம்)

ஜனுதிபதி தேர்தல்ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளரான திரு ஹெக்டர் கொப்பேகடுவ யாழ். மாவட்டப்பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டுவிட்டு, நேற்று முன் தினம் கொழும்பு திரும்பினர்.

கொழும்பு திரும்புவதற்கு முன் நேற்றுமுன் தினம் காலை திரு. கொப்பேகடுவ யாழ். ஆயர் அதிவந் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையை அவரது இல்லத்தில் சந்தித்து ஆசீர்வாதம்பெற்றுர். திருவாளர்கள் கு. விநோதன், விஜயகுமாரதுங்க, எஸ் ஜே. பூராசா, ப கதிரவேலு ஆகியோா திரு. கொப்பேகடுவவுடன் சென்றிருந்தனர். (அ)

## பிரசாரக் கூட்டத்தில் பேராசிரியர் ஒஸ்மன்ட்

(யாழ்ப்பாணம்)

ஜனுதிபதி தேர்தலில் போட்டியிடும் கலாநிதி கொல்வின் ஆர் டீ சில்வாவை ஆதரித்துசாவகச்சேரி, உடுப்பிட்டி, வட்டுக்கோட்டை, கோப்பாய், பருத்தித்துறை, காங்கேசன் துறை ஆகிய இடங்களில் 16, 17-ம் திகதிகளில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டங்களில் பேராசிரியர் ஒஸ்மன்ட் ஜெயரத்ன கலந்துகொண்டு உரைநிகழ்த்தவுள்ளார். (மா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B 100236/81. Eelanaadu - P. O. Box, 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.